# விஷ்ணு பூஜை



ஸ்ரீமதஹோபில மடம் வித்வான்

ஸ்ரீ உப.வே. வித்வான் பெருக்காரணை சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி எழுதி தமிழ் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா மாத இதழில் வெளிவந்த தொடரின் தொகுப்பு

ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன் ஸமர்ப்பணம்

*1)* ***தொகுப்பு*** *= நெடுந்தெரு ஸ்ரீ முகுந்தன் ஸ்ரீநிவாஸன் ஸ்வாமி மற்றும் நெடுந்தெரு ஸ்ரீ திவாகர் கண்ணன் ஸ்வாமி*

*2)* ***மின்-புத்தக வடிவு செய்ய உதவியவர்கள்*** *= மன்னார்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் நாராயணன் ஸ்வாமி, ஸ்ரீ முரளீ தேசிகாச்சாரி ஸ்வாமி மற்றும் ஸ்ரீமதி ஜெயஸ்ரீ முரளீ*

*3)* ***படங்கள் உதவி*** *= anudinam.org*

*அட்டைப்படத்தில் ஸ்ரீமதஹோபில மட ஆராத்ய மூர்த்திகளுக்கு ஸ்ரீமதழகியசிங்கர் திருவாராதனம் ஸமர்ப்பித்தாகிறது.*

# விஷ்ணு பூஜை



*(உபய நாச்சிமார்களுடன் ஸ்ரீ ப்ரஹ்லாத வரதன், ஸ்ரீ அஹோபிலம்)*


ஸ்ரீமதஹோபில மடம் வித்வான்
ஸ்ரீ உப. வே. வித்வான் பெருக்காரணை சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி
எழுதி



தமிழ் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா மாத இதழில் வெளிவந்த தொடரின்
தொகுப்பு


ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன் ஸமர்ப்பணம்



ஸ்ரீ:

# விஷ்ணு பூஜை

# 1

## அடியேன் செய்யும் விண்ணப்பம்



ஸ்ரீ உப. வே. வித்வான் பெருக்காரணை சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமி

புத்தாண்டு பிறந்தது. இதற்குப் பராபவம் எனப் பெயர் இப்பெயரின் அழகே அழகு. நம் முன்னோர்கள் ஆழ்ந்த கவனத்துடன் ஒவ்வோர் ஆண்டுக்கும் ஒவ்வொரு பெயரிட்டனர். சென்ற ஆண்டிற்கு விச்வாவஸு எனப் பெயர். முனிவர்களில் ஒருவருக்கு விச்வாமித்ரர் எனப் பெயர் உண்டு. அது போல் உள்ளது இதுவும். கடவுளை வழிபட்டு, வணங்கி, நற்காரியம் செய்யாதவர்களுக்குப் பராபவம் தான் உண்டாகும் என்று தெரிவிப்பது போல் உள்ளது இவ்வருஷத்திய பெயர். எம்பெருமானை வணங்குகிறவர்களுக்கு ஒருக்காலும் பராபவம் உண்டாகாதன்றோ? "உன் திருவடிகளைப் பற்றினவர்களுக்குப் பராபவத்தை உண்டாக்குவது உனக்குத் தகுந்தது அன்று (किं तु त्वदग्रे शरणागतानां पराभवो नाथ न तेऽनुरूपः) (கிந்து த்வதக்ரே சரணாகதாநாம் பராபவோ நாத ந தே அனுரூப:) என்றன்றோ ஸ்ரீ ஆளவந்தார் கூறினார். எனவே நாம் செய்யும் ஒவ்வொரு வேலைகளுக்கும் முன்பு கடவுளை வணங்கி வேலையில் இறங்க வேண்டும் என்று இவ்வருடப் பெயரே கூறுகிறது போல் உள்ளது. இப்பொழுது பல உபந்யாசங்களைப் பெரியோர்களின் நியமனத்தை முன்னிட்டு எழுத இசைந்துள்ளோம். இதில் நாமாக எதையும் எழுதப் போவதில்லை. நம் ஆசாரியர்கள் சென்ற வழியிலேயே நாமும் சென்று நம் அறிவிற்கு எட்டின வரையில் எல்லோரும் எளிதாக அறிந்துகொள்ளும் ரீதியில் எழுத ஆரம்பித்துளோம்.

வேதங்களுக்குத் தமிழில் மறை எனப் பெயர். அது அரிய பெரிய பொருள்களை மறைத்து வைத்துக்கொண்டிருக்கிறபடியால் அப்பெயரைப் பெற்றது. அதன் கருத்துகள் யாவற்றையும் நாம் அறிந்து கொள்வதற்குப் பல துறைகளை வகுத்துக் காட்டியுள்ளனர் ஆன்றோர். இருள் தருமா ஞானத்துள் உள்ள

நாம், பெரியோர்களுடைய உபதேசத்தை விட்டு வேறு எவ்வகையாலும் நல்ல மார்க்கத்தைக் கைப்பற்றச் சக்தி அற்றவர்களாக இருக்கின்றோம். இவை நல்லவை, இவை தீயவை என்பதையே அறிய முடியாத நாம் எப்படி நல்வழியில் சென்று நற்கதியை அடைய முடியும். எந்த வழியிலே மகா ஜனம் செல்லுகிறதோ அதுதான் நல்மார்கம், (**महाजनो येन गतस्स पन्था:**) (மஹாஜநோ யேந கத: ஸ பந்தா:) என்று யக்ஷப்ரச்னத்தில் தருமபுத்திரர் கூறினார், ஆகவே நாமும் ஆன்றோர்களுடைய ஸ்ரீ ஸூக்தியைத் தழுவிப் பல விஷயங்களை விஜ்ஞாபிக்கின்றோம்,

முதலில் விஷ்ணு பூஜை என்பதைப் பற்றித் தெரிவிக்கிறோம். அது ஒவ்வொருவராலும் அவசியம் செய்யப்படவேண்டிய நற்கருமம். விஷ்ணு பூஜை செய்து அதன் பிறகே அவனுக்கு இட்ட அன்னத்தைப் புசிக்க வேண்டும். எவனொருவன் கடவுளுக்கு நிவேதனம் செய்யாமல் தனக்காகவே என்று சமைத்துப் புசிக்கிறானோ அவன் வெறும் பாபத்தையே உண்ணுகிறான். ஆகையால் பகவானுக்கு நிவேதனம் செய்தே புஜிக்க வேண்டும் என்றார் கீதையில் கண்ணன். திருமாலிருஞ்சோலையில் வாஸம் செய்கின்ற குறவர்களும் அங்குள்ள எம்பெருமானுக்குத் தினைகளை நிவேதனம் செய்தே புசிக்கின்றனர் என்றார் பெரியாழ்வார். "புனத்தினை கிள்ளிப் புதுவவி காட்டியுன் பொன்னடி வாழ்க வென்று, இனக் குறவர் புதிய துண்ணும் எழில் மாலிருஞ்சோலை எந்தாய்" என்பது அவர் பாசுரம்.

ஸ்ரீ ராமபிரானும் தமக்குப் பட்டாபிஷேகம் நிச்சயித்த பிறகு தம் குலதெய்வத்துக்கு ஆராதனம் செய்து அக்னியில் ஹோமம் இட்டு மீந்ததையே புசித்தார் என்று வால்மீகி கூறுகிறார்.

இப்பூஜையை அவச்யம் செய்யவேண்டுமென்பதை உலகத்திற்குக் காட்டுவதற்காகவே திருவேங்கடமுடையான் (ஸ்ரீநிவாசன்) கல்யாணத்தில் ஸ்ரீ அஹோபில லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு நிவேதனம் செய்தருளினார், தன்னைப் பூஜிப்பதற்காகவே தயையால் உலகை ஸ்ருஷ்டி செய்தான் கடவுள்.

பல விதமான உடல்களையும் பல துன்பங்களையும் ஜீவன்களுக்குக் கொடுத்துக் கண்டத்தை உண்டுபண்ணுகிற அத்தேவனுக்கு இரக்கம் என்பது எப்படிப் பொருந்தும் என்று சிலர் நினைப்பர். அது தவறு. "இரக்கம் எங்கு உகுத்தாய் என்பால் எப்பிழை கண்டாய் அப்பா" என்று வாலி கேட்டதற்குச் சக்ரவர்த்தி திருமகன் சொன்ன விடையைக் கேட்டு அவர்கள் தெளியவேண்டும். அதாவது குற்றவாளியைத் தண்டிப்பவனும், சிக்ஷையை அடைந்த குற்றவாளியும் துன்பத்தை அடைய மாட்டார்கள் என்பது. ராஜாதி ராஜனான ஈச்வரன் நாம் செய்த குற்றத்திற்குத் தக்கவாறு உடல்களையோ துன்பங்களையோ கொடுக்கிறான்.

இங்கே "கண்ணனே, ஜீவன்களுக்குப் பலவிதமான துன்பங்களைக் கொடுக்கக்கூடிய உனது ஸ்ருஷ்டியை தீயச்செயல் என்றே நான் முன்பு நினைத்தேன். இப்பொழுது அப்படி நினைக்க மாட்டேன். எங்களை நீ படைக்காவிடில் உன் அழகு பொருந்திய திருமேனியைக் கண்களால் கண்டும், உன் குணங்களைக் காதுகளால் கேட்டும் நாங்கள் எப்படி ஆனந்த ஸாகரத்தில் முழுக முடியும்" என்றார் ஒரு கவி.

உலகைப் படைத்த ஸர்வேச்வரன் அத்தனாகி, அன்னையாகி, ஆளும் நம் பிரானுமாய் இவ்வுலகத்திலே பல அவதாரங்களை எடுத்து நமக்கு அருள் புரிகிறான். இப்படி அவதரித்தும் "கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும் கோதில் வள்ளலான அவனை அறியாமல் விட்டு, எந்நாவில் இன் கவியான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்" என்றிராமல் "மன்னா மனிசரைப் பாடிப் பூசித்துச் சிலவான பொருளைப் பெற்றுக் கடைசியில் துன்பக் கடலில் மூழ்கின்றார்கள் அந்தோ! அவனை உள்ளபடி அறிந்தும், எவ்வகையில் அவனுக்கு ப்ரீதியை உண்டுபண்ணுவோம்" என்று அறியாமல் இருப்பவர் பலர் உண்டு. எது செய்யத் தகுந்தது, எது செய்யத் தகாதது என்கிற அறிவே நமக்கு எளிதில் உண்டாகாது. தீயசெயலைத் தர்மம் என்று எண்ணிச் செய்கிறேன். தருமத்தை தீயசெயல் என்று எண்ணி விட்டு விடுகிறேன் (कर्तव्यमित्यनुकलं कलयाम्यकृत्यं स्वामिन्नकृत्य मिति कृत्यमपि त्यजामि) என்றார் வேதாந்த தேசிகன். நன்கு தெரிந்திருந்தும் "अकृत्यानां च करणं कृत्यानां वर्जनं च मे" என்கிறபடி செய்யவேண்டுமவைகளை விடுவதும் செய்யத் தகாதவைகளைச் செய்வதும் உண்டு.

எம்பெருமானை உபசரித்து பூசிக்குமிடத்தில் "यथा युवानं राजानं यथा च मदहस्तिनम् । यथा प्रियातिथिं दृष्टा तथैवोपचरेद्धरिम् ॥" யதா யுவாநம் ராஜாநம், யதா ச மதஹஸ்திநம் யதா ப்ரியாதிதிம் த்ருஷ்ட்வா ததைவ உபசரேத் ஹரிம் என்றது சாஸ்திரம். யுவராஜனைப் போலவும், மதம் பிடித்த களிறைப் போலவும், நட்புக்குரிய அதிதியைப் போலவும் பூஜிக்க வேண்டும் என்பது இதன் பொருள். கடவுளுக்குச் செய்ய வேண்டிய உபசாரங்கள் பல. அவைகளில் முக்கியமானவை பதினாறு. உபசாரங்கள் பல இருந்தபோதிலும் பிரதானமானவை முப்பத்திரண்டு என்று சாஸ்திரம் வகுத்தது. ஸ்ரீ வால்மீகி பகவான் நாரத முனிவரை பணிந்து கேட்கும்கால் 16 குணங்களுடன் கூடிய உத்தமப் புருடன் யார் என வினவினார். 16 குணங்களுடன் கூடிய ஸர்வேச்வரன் 16 உபசாரங்களால் பூஜிக்கப்படுகிறான் போலும். இந்த உபசாரங்களுடன் பூஜிப்பது தான் விஷ்ணு பூஜையாகும். இங்கு,

आह्वानं चासनार्घ्यं पदसलिलमथाचामपुंसूक्तयुक्त

स्नानं वस्त्रोपवीते मलयजकुसुमे धूपदीपौ क्रमेण ।

मध्वादे:पर्क आदौ उपरि च सलिलं पायसाद्यन्नजातं

पानीयाचामपूगं परिगति नमनोद्वासनं विष्णुपूजा ॥

என்கிற ச்லோக ரத்னம் நோக்கத் தக்கது. இதன் பொருள் எம்பெருமானை (1) அழைத்தல், (2) ஆஸனமிடல், (3) அர்க்யம் கொடுத்தல், (4) பாத்யமிடுதல். (5) ஆசமனம் ஸமர்ப்பித்தல், (6) புருடஸூக்தத்தால் ஸ்நாநம் செய்வித்தல், (7) வஸ்த்ரம் கொடுத்தல் (8) உபவீதம் ஸமர்ப்பித்தல், (9) சந்தனம் பூசுதல் (10) புஷ்பங்களால் அர்ச்சித்தல், (11) தூபதீபங்களைச் ஸமர்ப்பித்தல் (12) மதுபர்க்கம் (13) அர்ஹணாம்பு, (14) பாயஸாதி அன்னம் இடுதல் (15) பானீயம், தாம்பூலம் முதலியவைகளை ஸமர்ப்பித்தல், (16) ப்ரதக்ஷிணம் செய்தல், ஸேவித்தல், உத்வாஸனம் செய்தல். இவைகள் விஷ்ணு பூஜையாகும். இங்கே பதினாறு உபசாரங்களுக்கு மேலாகச் சிலவற்றைச் சொல்லி இருந்த போதிலும் பதினாறு உபசாரங்களுக்குள் அவற்றை அடக்கிக்கொள்ள வேண்டியது.

# 2

## ஆஹ்வானம்



ஆஹ்வானம் என்பது ஒர் உபசாரம். அழைத்தல் என்பது அதன் பொருள். விஷ்ணு பக்தர்கள் தினந்தோறும் செய்ய வேண்டிய கருமங்களைக் கூறும் ஆஹ்நிக க்ரந்தத்தில் பகவதாராதனப் ப்ரகரணத்தில் இந்த உபசாரத்தைச் சொல்லியிருப்பதைக் காண்கிறோம்."परमधामावस्थित! मदनुग्रहाभिमतोद्यतावतार! अभिमतसिद्धिद मन्त्रशरीर! एह्येहि भगवन्! आगच्छ-आगच्छ।" என்பதைச் சொல்லிக் கடவுளைக் கூப்பிடுகிறோம். சாளக்கிராமம் முதலிய அர்ச்சைகளிலும் நாம் பூஜை செய்யும்போது இதை அவசியம் செய்ய வேண்டும் என்று சிலர் கூறுவர். எப்போதும் அர்ச்சையில் கடவுளுடைய ஸான்னித்யம் இருந்த போதிலும் கௌரவத்திற்காக அவரைக் கூப்பிட்டு இதில் இருக்கும்படி பிரார்த்தனை செய்கிறோம் என்பது அவர்கள் அபிப்ராயம். பரமதாமம் எனப்படும் வைகுண்ட

லோகத்தில் மஹாலக்ஷ்மியுடனும் பக்தர், பாகவதர் இவர்களுடனும் ஒருவராலும் அறிந்துகொள்ள முடியாத ஸ்வரூபத்தையுடைய மகாவிஷ்ணு இருக்கிறார் என்கிறது லிங்கபுராணம். அவரே ஸாதுக்களைக் காப்பதற்காக ஆதியம் சோதியுருவை அங்கு வைத்து இங்குப் பிறந்து பல அவதாரங்களை (ரூபங்களை) எடுக்கிறார். இப்படியிருந்தும் அவரவர் தாம்தாம் அறிந்தவாறு "இவரிவர் எம்பெருமான்" என்று ஏத்துகின்றனர் ஐயோ! நம்மாழ்வாரும் "அவரவர் தம தமது அறிவறி வகை வகை. அவரவர் இறையவர் எனதடி அடைவர்கள்" என்று சொல்லிக் கடைசியில், "அவரவர் விதிவழி அடைய நின்றனரே" என்றார்,

இப்படிச் செய்யும் அவதாரங்களில் பெறுக்காறு போன்ற விபவம் போல் தேங்கின மடுவு போன்ற அர்ச்சையும் உண்டு. "தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்தானே தமருகந்தது எப்பேர் மற்றப்பேர்'' என்கிற கணக்கிலே பாகவதர்களுடைய அபேட்சைக்கு தக்கவாறு எம்பெருமான் பல அவதாரங்களை எடுத்துக்கொள்கிறான். இப்படி அவதாரம் செய்து நமக்கு வேண்டும் பலத்தைத் தந்து அருளும் பகவானைக் கூப்பிட்டு வேண்டிய பயனைப் பெறுகிறோம், த்ரௌபதி பலவிடங்களில் எம்பெருமானைக் கூப்பிட்டு விரும்பிய பலன்களை அடைந்தாள் என்பது புராணப் பிரசித்தம். அந்தகன் சிறுவனான துரியோதனனுடைய அவையில் அவன் இளையவனான துச்சாஸனனாலே துன்புறுத்தப்பட்ட த்ரௌபதி, "ஹா கிருஷ்ண த்வாரகாவாஸ!'' என்று கூப்பிட்டு வஸ்திர லாபத்தை அடைந்து மானத்தைக் காப்பாற்றிக்கொண்டாள். எல்லாவற்றிலும் உள்ளும் வெளியிலும் பரவியுள்ள எம்பெருமான் த்ரௌபதியின் வஸ்திரத்திலும் இருக்கிறபடியால் தம் உடல் ஆன வஸ்திரத்தைப் பெருகச் செய்தான். அவன் தன் உடலைப் பெருகச் செய்வது என்பதன்றோ உலகைப் படைப்பது. கண்ணன், இந்திரன் சிறுவன் தேர்முன் நின்று குதிரைகளின் கடிவாளத்தைப் பிடித்து இழுப்பதும் அதனால் அதே சமயத்தில் துரியோனாதிகளின் மனைவிகளின் கழுத்தில் உள்ள மாங்கல்ய சூத்திரங்களை அசையச் செய்ததும் இவளுடைய அழைப்பிற்கு இணங்கி அன்றோ! திருமங்கை மன்னன் "நூற்றுவர் தம் பெண்டிரு மெய்தி நூல் இழப்ப இந்திரன் சிறுவன் தேர் முன் நின்றானைத் திருவல்லிக்கேணி கண்டேனே" என்று மிக அழகாக அருளிச் செய்தார்.

பஞ்சபாண்டவர்கள் த்ரௌபதியுடன் வனத்தில் வாஸம் செய்யுங்கால் அவர்களது பெருமையைப் பொறாத துரியோதனன் தன்னிடம் வந்த துருவாச முனிவரை அவர்களுக்குக் தீங்கிழைக்கும்படி ஏவினான். அவரும் மதிமயக்கத்தால் அவர்களிடம் அதிதியாகச் சென்றார், அச்சமயத்தில் வந்த அம்முனிவருக்குப் பூஜையை எப்படிச் செய்வது என்று கலங்கிப் பிறகு த்ரௌபதி கண்ணனைக் கூப்பிட்டாள். கண்ணனே, கண்ணனே, பெருத்த திருக்கைகளை உடையவனே, தேவகியின் புதல்வனே, அழிவு அற்றவனே, வசுதேவனின் மைந்தனே, உலகுக்கு

நாதனே, வணங்குமவர்களின் துன்பத்தைக் கொய்து அருள் புரிபவனே, அடைந்தவர்களை நழுவ விடாமல் காப்பவனே, புருஷோத்தமனே, எழுந்தருளவேண்டும். எழுந்தருள வேண்டும், எனக்கு நன்மையைக் தரவேண்டும்.

कृष्ण कृष्ण महाबाहो देवकीनन्दनाव्यय |

वासुदेव जगन्नाथ प्रणतार्तिहराच्युत ||

आगच्छागच्छ मे भद्रं प्रयच्छ पुरुषोत्तम |

என்று. கண்ணனும் ஓடோடி வந்து என்ன வேண்டும் என வினவி, "எனக்கு மிகப் பசியாக இருக்கிறது ஏதாவது கொஞ்சம் உண்ண உணவை அளி" என்று கேட்டான். மாங்காய் அளவு சோறு இட்டால் உனக்குப் பசி இல்லாமல் இருக்க மருந்து கொடுக்கிறேன் என்பது போல் இருந்தது அவ்வார்த்தை, த்ரௌபதியும் அவ்வமயத்தில் வந்த துர்வாஸருக்கு அன்னம் இட உம்மை தான் அழைத்தேன். தேவரீரே பசி என்று சொன்னால் நான் என்ன செய்வது? என்றாள். ஸர்வேச்வரன் துர்வாஸரைத் திருப்தி செய்விக்க வேண்டும் என்று எண்ணியே இம்முறையில் கேட்டான் என்பது அவளுக்கு எப்படித் தெரியும், பாவம். இப்படி வருந்திய த்ரௌபதியைப் பார்த்து அக்ஷய பாத்திரத்தை எடுக்கச் சொல்லி அதில் ஒட்டிக் கொண்டிருந்த அன்னத்தில் தீர்த்தத்தைச் சேர்த்துக் தான் வாங்கி அமுது செய்தான். ஸர்வாந்தர்யாமியான ஈச்வரன் உண்ண, துருவாஸ முனிவரும் தீர்த்தக் கரையில் அதிகமாக அமுது செய்தவர் போல் ஆகி எழுத்திருக்க முடியாமல் தவித்தார்.

கம்ஸனால் ஏவப்பட்ட அக்ரூரர், கோகுலம் சென்று கிருஷ்ணனைக் கூப்பிட்டுக்கொண்டு அவருடன் வரும் சமயத்தில் வழியில், கண்ணனை அழைத்ததின் பயனாக அவர் கண்ட அதிசயத்தைக் கேண்மின்! இராமனையும் கண்ணனையும் தேரிலேயே இருக்கச் செய்து தான் யமுனை நதியில் நீராட இறங்கினார். யமுனைத் தண்ணீரில் அவ்விருவரையும் கண்டார். "இதென்ன தேரில் இருக்கும் இச் சிறுவர்கள் இங்கு எப்படி வந்தனர்? அல்லது விழுந்துவிட்டார்களோ? தேரில் இருக்கமாட்டார்கள்" என்று எண்ணி ரதத்தைப் பார்த்தார். அங்கும் அவர்களைச் சேவித்தார். பிறகு, "நகரம் அருள் புரிந்து நான்முகர் பூமேல் பகிர மறை பயந்த பண்பன் பெயரினையே புந்தியால் சிந்தித்து" ஜபம் செய்யத் தொடங்கினார். அப்பொழுதும் எதிரில் சேர்ந்த இராமகிருஷ்ணர்களைக் கண்டார். "அந்தோ! இதென்ன! இருளிரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி யினத்துத்தியணி பணமாயிரங்களார்ந்த, அரவரசப் பெருஞ்சோதி அநந்தனென்னும் அணிவிளங்கு முயர்வெள்ளை யணையை" அடைந்து நீலமேக ஷ்யாமளனாயும் பீதாம்பரதாரியாயும் நான்கு திருக்கைகளோடு

கூடியவனாயும் செந்தாமரைக் கண்களோடு கூடியவனாயும் எம்பெருமான் சேவை ஸாதிக்கிறான் என்று ஆனந்தப் பரவசராய்த் துதிசெய்தார் எம்பெருமானை.

நாரதர் வியாஸ பகவானிடம் தம் பூர்வ ஜன்மத்தைக் கூறுகிறார். தபஸ் புரியும் முனிவர்களிடம் பணிவிடை செய்யும் தாஸியின் புதல்வன் நான். அவர்களுடைய உச்சிஷ்டத்தை ஒருகால் அவர்களின் நியமனத்தின் பேரில் புசித்தேன். அதனால் என் பாவங்கள் விலகின. நித்ய ஸூரிகளால் அறிய முடியாத மகிமை உடையவனே என்றும் தேன் பெருகுகின்ற அழகிய திருத்துழாய் மாலையைத் தரிப்பவனே என்றும் எவர்கள் கூறுகின்றனரோ அவர்கள் தாழ்ந்த செயல்களைச் செய்கிறவர்களாயும் பிறரைக் கொண்டு செய்விக்கிறவர்களாயும் இருந்தபோதிலும் அவர்கள் புசித்த அன்ன சேஷத்தை நாம் புசித்தால் அது பரம பவித்திரம் என்பதன்றோ ஆழ்வாரின் அருளிச் செயல். "வாயுகும் குருகைத் திருவீதி யெச்சிலை வாரியுண்ட நாய்க்கும் பரமபதம் அளித்தாய். அந்த நாயொடு இந்தப்பேய்க்கும் பழுதோ! பெருமாள் மகுடம் சாய்க்கும் படிக்குக் கவி சொல்லும் ஞானத்தமிழ்க் கடலே" என்ற சடகோபன் அந்தாதியையும் நோக்கவும். பிறகு என் தாய் சர்ப்பத்தால் தீண்டப்பட்டு இறந்தாள். என்னுடைய வயது அப்பொழுது ஐந்து. என் தாயின் மரணத்தை அனுக்கிரக காரியமாகவே எண்ணிக்கொண்டு வடக்கு நோக்கிச் சென்றேன். அங்கே கங்கையில் ஸ்நானம் செய்து கடனைத் தீர்த்து உட்கார்ந்தேன். அவ்வமயம் எப்பெருமான் தீடீரென்று சேவையைக் கொடுத்து மறைந்தான். பிறகு ப்ரளயத்தில் கடவுளின் உடலில் புகுந்து ஸ்ருஷ்டி வந்ததும் அவனுடைய மூச்சிலிருந்து உண்டானேன். அவனால் கொடுக்கப் பட்ட வீணையைப் பெற்று எம்பெருமானின் புகழைப் பாடிக்கொண்டே ஸஞ்சாரம்



செய்கிறேன். அவனைக் கானம் செய்யும் சமயத்தில் என்னால் கூப்பிடப்பட்டவன் போல் வெகு விரைவில் வந்து என் மனத்தில் சேவை சாதிக்கிறான். என்றார், நாரதர். आहूत इव मे शीघ्रं दर्शनं याति चेतसि இங்கு எம்பெருமானின் ஆஹ்வானத்தை உவமையாகக் கூறி இருப்பதிலிருந்தே இதன் மகிமையை நன்கறியலாம்.

முதலைவாய் கோள்பட்டிருத்த கஜேந்திரனும், "நாராயணா! ஓ மணிவண்ணா, நாகணையாய் வாராய்" என எம்பெருமானைக் கூப்பிட அலைகுலைய, தலைகுலைய ஸர்வேஸ்வரன் ஓடிவந்து அதனைக் காத்து அருளினான். இங்கு ஓடிவத்து கஜேந்திரனைக் காத்தது ஓர் அதிசயமன்று. முள்பட்ட இடத்தில் ஒத்தடம் கொடுப்பது உலக வழக்கம். அதுபோல் ஈச்வரனும் தன் பீதாம்பரத்தை வாயில் வைத்துக் கொண்டு பூத்காரம் செய்து யானையின் காலைத் தன் திருக்கையால் பிடித்து ஒத்தடம் கொடுத்தான் என்பது இங்கே மிக மிகப் போற்றத் தக்கது. जिग्मुपस्त गजोत्तमबृंहितेन पादं परामममृशुयोपिच कामनीषा। இம்மாதிரி இந்த உபசாரத்தையும் அதன் பயன்களயும் பலவிடங்களிலும் காணலாம்.

# 3

## ஆஸனம்



ஆசனமிடுவது ஒரு சிறந்த உபசாரமாகும், பெரியோர்கள் நம் இல்லத்தை நாடி வந்ததும் அவர்களுக்கு ஆசனமிடுவது வழக்கம். நாம் ஜபம், த்யானம் முதலியவைகளைச் செய்யும் தருணத்திலும் ஆசனத்தில் உட்காருகிறோம், கீதாசார்யனும் இதை எடுத்துக் காட்டியுள்ளான்; "பரிசுத்தமான தேசத்தில் அதிகத் தாழ்வும் அதிக உயரமும் இல்லாமல் வஸ்திரம், மான்தோல், தர்பம் இவைகளைச் சேர்த்து அதில் அமர்ந்துகொண்டு மனம், கண் முதலியவைகளை அடக்கி ஒரே லக்ஷ்யத்தில் மனத்தைச் செலுத்தி யோகத்தைச் செய்ய வேண்டும்'' என்றார். இங்கு முதலில் தர்பம், அதன் மேல் மான்தோல், அதன்மேல் வஸ்த்ரம் என்று சிலர் கூறுவர். முதலில் வஸ்த்ரம் அதன்மேல் மான்தோல், அதன்மேல் தர்பம் இம்மாதிரி மரத்தால் செய்யப்பட்ட ஆசனத்தில் சேர்த்து அதில் உட்கார்ந்து யோகம் புரிய வேண்டும் என்றும் கூறுவர் சிலர்.

அந்தணர்களுடைய ப்ருஷ்ட பாகத்தில் அலக்ஷ்மி வசிக்கிறாள். எனவே நம் வீட்டை அண்டி வந்த அவர்களுக்கு ஆசனமிட்டு அவர்களை உட்கார வைக்க

வேண்டும். ஆசனம் இல்லாமல் அவர்கள் உட்கார்ந்தால் அந்த அலக்ஷ்மி நம் வீட்டில் ஒட்டிக் கொள்ளுவாள் என்று நினைத்து ஆசனம் இடுகிறார்கள் போலும்.

நாம் பித்ரு தேவதைகளைக் குறித்துத் தர்ப்பணம் செய்யும்போது பித்ருக்களை ஆவாஹனம் செய்து ஆசனமிட்டு உட்கார வைக்கிறோம். நாமும் ஆசனத்தில் உட்கார்ந்து நம் வீட்டுக்கு வந்த அதிதிகளுக்கும் ஆசனமிடுவது வழக்கமாக இருக்க நம் ஆஹ்வானத்துக்கு இணங்கி அருள் புரியத் திருவுள்ளம் கொண்டு வந்துள்ள இராஜாதி ராஜனான கடவுளுக்கு ஆசனமிடுவதைப்பற்றிப் பேசவும் வேண்டுமா? எம்பெருமானே தன் இல்லத்தை நாடி வந்தவர்க்கு ஆசனமிட்டு உபசரித்துக் காட்டினான், ருக்மிணியினுடைய ஸந்தேசத்தைக்



கொண்டு வந்த அந்தணரைப் பார்த்துத் தம் ஆசனத்தினின்றும் இறங்கி அவரை அதில் உட்கார வைத்தான். दृष्ट्वा ब्राह्मण्यदेवस्तं अवरूह्य निजासनात्। उपवेश्यार्हयांचक्रे यथात्मानं दिवौकसः॥ என்று பாகவதம் கூறுகிறது.

தன் விஷயத்தில் தேவர்கள் எப்படி நடந்துகொள்வார்களோ அம் முறையில் கண்ணன் அந்த அந்தணர் விஷயத்தில் நடந்துகொண்டான் என்பதை இங்கே கவனிக்கவும். புஷ்பஹாஸ சுகுமாரமான திருமேனிக்குத் தக்கபடி புஷ்பங்களையே ஆசனமாக இடுவது நல்லது. ஆனது பற்றியே சக்ரவர்த்தித் திருமகன் சிருங்கிபேரபுரத்துக்கு எழுந்தருளினபோது குகப்பெருமான் அவருக்குத்

தளிர்களையும் புஷ்பங்களையுமே இட்டுப் படுக்கையைப் பரிகல்பனம் செய்தான். பிறகு இதைக் கண்ட பரதன், "இதென்ன காலம்! தெய்வத்தைக் காட்டிலும் காலமே பெரியது. இதுவா என் அண்ணனின் படுக்கை? ஆபரணத்தோடு என் மதனி இங்கே படுத்துறங்கினாள் என்பது நன்றாகத் தெரிகிறது" என்று தளிர்களும் புஷ்பங்களுமே ராமபிரான் திருமேனிக்கு வாட்டத்தைக் கொடுக்கும் என்று வருந்தினான்.

பஞ்ச பாண்டவர்களுக்காகத் தூது சென்ற கண்ணபிரானுக்குப் பாவி துரியோதனன் கபடமான ஆசனத்தை இட்டான். தீங்கையும் அப்போதே அடைந்தான் "அரவு நீள்கொடியோன் அவையுள் ஆசனத்தை அஞ்சிடாதே இட" என்று சிறிதேனும் அச்சமில்லாமல் துரியோதனன் இட்டான் அந்தோ! என்று திருமங்கை மன்னனும் வருந்தினார்.

பக்தி நிறைந்த விதுரன் தன் இல்லத்துக்கு எழுந்தருளிய கண்ணனுக்குத் தான் இட்ட ஆசனத்தைப் பன்முறை அசுரன் புகுந்திருப்பானோ என்று கண்ணனிடத்தில் உள்ள பரிவினால் புரட்டிப் பார்த்தார். **संस्पृशन्नासनं शौरेः विदुरस्समहामतिः** என்றார் வியாசர். இங்கே மஹாமதி என்பதற்கு அறிவுக்கேடன் எனப் பொருளுரைத்தார். சிறந்த அறிவுடைய விதுரர் கண்ணனிடத்தில் உள்ள பரிவினால் எல்லாவற்றையும் ஆக்கவும் அழிக்கவும் திறமை பொருந்திய கண்ணனுக்கு என்ன வருகிறதோ என்று மதிமயக்கத்தை அடைந்தார். "ஜ்ஞான விபாக காரியமான அஜ்ஞானத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்" என்ற ஸ்ரீவசன பூஷணத்தை நோக்கவும். ஜ்ஞானம் வளர வளர அது சிறந்த பக்தியை மூட்டும். அதனால் அவிவேகம் உண்டாகும். அந்த அவிவேகத்தால் உண்டான செயல்களெல்லாம் மிக ச்லாக்கியமானவை என்பது இதன் பொருள்.

வேட்டையாடுவதற்கு வந்த க்ஷத்திரியரான விஸ்வாமித்ரருக்கும் பிராம்ஹணோத்தமரான வசிஷ்டர் ஆசனமிட்டு உபசரித்தார். **आसनं चास्य भगवान् वसिष्ठो व्यादिदेश ह |** ராமபிரான் தன் பட்டாபிஷேகம் தட்டிப் போன பிறகு தன் தாயைப் பார்க்கச் சென்றன். அவ்வமயம் தேவதைகளை ராமனுக்காகப் பூஜித்துக்கொண்டிருக்கும் கௌஸல்யை, அழகிய ஆசனம் ராமனுக்கு இட்டாள். அது கண்டு ராமன், "அம்மா! எதற்கு இது? தர்ப்பங்களை ஆசனமாக அமைத்து உட்கார வேண்டிய காலம் வந்துள்ளது என்றார். **विष्टरासनयोग्यो मां कालोऽयं समुपागतः** உலகுக்குத் தாயான ஸீதா பிராட்டியும், துறவிவேடம் தரித்து வந்த இராவணனுக்கு முதலில் ஆசனமிட்டு உலகுக்கு காட்டினாள், **उपनीयासनं पूर्वं**

पाद्योनाभिमन्त्य च இப்படி அதிதியாக வந்தவர்களுக்கு உசிதமான ஆசனமிடுதலும் நம் பெருமானுக்கு அவசியம் இதைச் செய்து உபசரித்தலும் முக்கியமானது என்று அறிகிறோம்.

## அர்க்யம்

எம்பெருமான் ஆசனத்தில் உட்கார்ந்ததும் அவனுடைய வலக்கையில் பரிசுத்தமான தீர்த்தத்தை மிக அன்புடன் ஸமர்ப்பித்தல் அர்க்யம் எனப்படும். நம் க்ருஹத்தை நாடிவந்த அதிதிகளுக்கு இதை செய்வது மிக அவசியம். தன் சக்திக்குத் தக்கவாறு தங்கப் பாத்திரத்திலேயோ, வெள்ளிப் பாத்திரத்திலேயோ வேறு பாத்திரங்களிலுலேயோ தண்ணீரை எடுத்து வந்து அன்னவர்களின் திருக்கையில் சேர்க்க வேண்டும். வரதந்து முனிவரின் சீடனான கௌத்ஸர் பதினான்கு வித்யாஸ்தானங்களையும் கற்றார். பிறகு யதாசக்தி குரு தக்ஷிணை கொடுக்க விரும்பி குருவிடம் விஜ்ஞாபித்தார். குருவும் சீடனின் வறுமையைக் கண்டு பன்முறை தடுத்தார். ஆயினும் குருதக்ஷிணை கொடுப்பதிலேயே இவரது மனம் நாடிற்று. गुरुशुश्रूषया विद्या पुष्कलेन धनेन वा । अथवा विद्यया विद्या तुरीयोनोपद्यते பணிவிடை செய்தோ, நிறையதனத்தை கொடுத்தோ தனக்கு தெரிந்துள்ள வித்யையைக் கொடுத்தோ வித்யையை சம்பாதிக்க வேண்டும். நான்காவது மார்க்கம் கிடையாது என்றல்லவா சாஸ்திரம் கூறுகிறது. பிறகு நிர்பந்தத்தின் பேரில் சினம்கொண்ட குரு, "சீடா? என்னிடம் நீ பதினான்கு வித்யைகளைக் கற்றுக் கொண்டாய். அதற்காக பதினாலு கோடி பணம் தக்ஷிணையாகக் கொடு" என்று நியமித்தார். ஐயோ! பாவம், சீடர் என்ன செய்வார். ஆயினும் மன நிம்மதி பெற்று சூரியகுலத்தை அவ்வமயம் ஆண்டுவந்த ரகு மஹாராஜனக் கண்டு அவனிடம் வாங்கி கொடுத்து விடலாமென்று நினைத்தார். அவனையும் அணுகினார். அதே ஸமயத்தில் அவ்வரசன் விச்வஜித் என்னும் சிறந்த யாகத்தை முறைப்படி செய்து, தன்னுடைய எல்லாப் பொருள்களையும் அந்தணர்களுக்கு கொடுத்து விட்டான். அவன் கையில் ஒரு காசும் கிடையாது. இவரைச் கண்டதும் அவ்வரசன் முறைப்படி உபசரிக்க தன்னிடமிருந்த மண் பாத்திரத்தில் அர்க்ய தண்ணீரை எடுத்து வந்து அவரது கையில் சேர்த்தான். स मृण्मये वीतहिरण्मयत्वात् पात्रे निधायार्घ्यमनर्घशीलः என்றான் மஹாகவி. பிறகு கீதையின் விவரம் வேறு இடம் கண்டு கொள்வது. தன் சக்திக்கு அனுகுணமாக இவ்வுபசாரத்தை அவசியம் செய்யவேண்டும் என்று தெரியப்படுத்தினான் அவ்வரசன்.

தசரதன் மந்திராலோசனை செய்யும் ஸமயம் வந்த விஸ்வாமித்திரருக்கு இவ்வுபசாரத்தையே செய்தான் என்று வால்மீகி சுட்டிக் காட்டுகிறார்: "प्रहृष्टवदनो

राजा ततोऽर्घ्यमुपहारयत्" சாபத்தில் நின்றும் விடுபட்ட அகல்யை ராமலக்ஷ்மணர்களுக்கு அர்க்யம் முதலியவைகளை நன்கு ஸமர்ப்பித்து மேன்மை



பெற்றாள். "पाद्यमर्घ्यं तथातिथ्यं चकार सुसमाहिता" ராமலக்ஷ்மணர்கள் கங்கை, யமுனை இவைகளின் ஸங்கமத்தின் சமீபத்தில் உள்ள பரத்வாஜாச்ரமத்திற்குச் சென்றனர். அங்கு ஹோமப்புகையைக் கண்டு முனிவர் இருப்பதை அறிந்து அருகில் சென்று வணங்கினர். அம்முனிவரும் இவர்களுக்கு பசுவையும் அர்க்யத்தையும் குடிதண்ணீரையும் கொடுத்து உபசரித்தார். "उपानयत धर्मात्मा गामर्घ्यमुदकं ततः"।

நாம் காலை, பகல், மாலை இம்மூன்று காலங்களிலும் அர்க்யத்தைக் கொடுக்கிறோம். இரண்டு கைகளிலும் சுத்தமான நீரை எடுத்து ப்ரணவவ்யாஹ்ருதியுடன் கூடிய காயத்திரியால் அபிமந்த்ரணம் செய்து சூரிய மண்டலத்தில் உள்ள எம்பெருமானை மனதால் சிந்தித்து இதைச் செய்ய வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது. இதன் பயன் வேதமே விவரித்து இருக்கிறது. முன்பு ராக்ஷஸர்கள் உக்ரமான தவம் புரித்தனர். ப்ரஹ்மதேவனும் பிரஸன்னமாகி என்ன வரம் வேண்டுமென வினவினான். ஆதித்யனுடன் போர் புரிய வேண்டும் என கேட்டனர். சரி என்றான் நான்முகனும். ஆகையினாலேயே தினந்தோறும் உதிக்கும் சூரியனோடு (அஸ்தமன வரையில், அரக்கர்கள் சண்டையிடுகின்றனர்) நாம் காயத்ரியினால் அபிமந்த்ரணம் செய்து அர்க்ய தீர்த்தத்தை மேலே விட்டால் இந்த தீர்த்தம் வஜ்ராயுதம் ஆகி அந்த அரக்கர்களை மந்தேஹாருணம் என்னும் தீவில் தள்ளுகிறது. அதனுல் உண்டான நம் பாவத்தை "அஸாவாதித்யோ பிரஹ்ம" என்று சொல்லி பிரதக்ஷிணம் செய்து போக்கடித்துக் கொள்கிறோம். உதிக்கும் காலத்திலும், அஸ்தமிக்கும் காலத்திலும் ஆதித்யனை த்யானம் செய்பவன் எல்லா விதமான நன்மைகளையும் பெறுவான் என்றது வேதம்.

# 4

## பதஸலிலம்

இதை "பாத்யம்" எனக் கூறுவர். இறைவனின் திருவடிகளில் தீர்த்தத்தைச் சேர்த்து அலம்புவது போல் மனதால் நினைக்க வேண்டும். அர்க்யம் ஒரு முறை பாத்யம் இருமுறை, ஆசமனியம் மும்முறை தீர்த்தத்தை ஸமர்ப்பிக்க வேணும் என்று பெரியோர் பகர்வர். எம்பெருமானின் திருவடி தீர்த்தம் எல்லோரையும் புனிதமாக்கும்.

वासुदेवकथा प्रश्नः पुरुषान् त्रीन् पुनाति हि ।

वक्तारं पृच्छकं श्रोतॄन् तत्पादसलिलं यथा ।।

என்றன்றோ ஸ்ரீ சுகப்ரம்மம் பரீக்ஷித் மகாராஜனிடம் கூறிற்று. "வாசுதேவனின் சரித்திரத்தைச் சொல்ல வேண்டும்." என்றால் இம்மாதிரி வினவுவனுக்கும் சொல்பவனுக்கும் செவியுறக் கேட்டவனுக்கும் பரிசுத்தி உண்டாம். எது போல் எனில் அவனுடைய பாதஸலிலம் போல் என்றது. திருவடி தீர்த்தமான கங்கை எங்கு உள்ளது? என்று ஒருவன் நீராட வினவ, அவனையும், அதற்கு மற்றுொருவன் விடை கூற அவனையும், அதை அருகில் இருந்து ஒருவன் கேட்க அவனையும் பரிசுத்தமாக்கும் என்பது இதன் கருத்து. "கங்கை, கங்கை என்ற வாசகத்தாலே கடுவினை களைந்திடகிற்கும்" என்றார் பெரியாழ்வார்.

நான்முகனின் குண்டிகையினுள்ள தீர்த்தமன்றோ எம்பெருமானின் திருவடி சம்மந்தமடைந்து கங்கை என பெயர் பூண்டு உலகுக்கு சுத்தியை உண்டுபண்ணுகிறது. ஆகையினாலேயே விஷ்ணு பக்தனான பரமசிவனும் இத் தீர்த்தத்தை மிக ஆவலுடன் தனது சென்னியில் தரித்தான். "சதுர்முகன் கையில் சதுப்புயன்தாளில் சங்கரன் சடையினில் தங்கி கதிர் முக மணி கொண்டு இழிபுனல் கங்கை" என்ற ஆழ்வார் பாசுரத்தை நோக்கவும். “तत्पादशौचं जनकल्मषापहं” தருமம் அறிந்த பலிச் சக்கரவர்த்தி மங்களகரமாயும் ஜனங்களின் பாபத்தை அகற்றுவதுமான அந்த வாமனனின் திருவடி தீர்த்தத்தை தன் தலையில் தரித்தான்.

இராமன் காட்டுக்கு எழுந்தருளினான். அங்கு கங்கையில் நீராடினான். அதனால் எம்பெருமானின் முன்பு திருவடி சம்மந்த மாத்திரம் அடைந்த கங்கை இப்பொழுது முழுத் திருமேனி சம்மந்தமடைந்ததால் அதிக மேன்மை பெற்று உலகத்தை நரகத்தில் வீழாமல் செய்யும் என்றார் கம்பர்:

செய்ய தாமரைத்தாள் பண்டு தீண்டலால்
வெய்யபாதகம் தீர்ந்து விளங்குவாள்.
ஐயன்மேனி எலாம் அளைந்ததால்
வையம் மாநகரத்திடை வைகுமோ

சாமான்யமான நம் கிண்டியிலுள்ள தீர்த்தம் பகவத் பாதஸ்பரிசத்தாலே கங்கை என்ற பெயரைச் சூட்டிக் கொண்டு உலகத்துக்கு நன்மையை அளிக்கிறது என்றால் அவ்வெம் பெருமானின் திருவடிகளின் பிரபாவம் இன்றியமையாதது என்றல்லவா ஏற்படுகிறது. வெறும் துரும்பு ப்ரஹ்மாஸ்திரமாக மாறிற்று. பாதுகை பூமியை ஆண்டது என்றால் எப்பொருளும் பகவத் சம்மந்தமடைந்தால் அவன் ஸங்கல்பத்தால் அதிகமான மேன்மையை அடையும் என்பதில் ஐயம் ஏது!



அஹல்யை தன் கணவனான கோதமனின் வேஷம் பூண்டு வந்த இந்திரனிடத்தில் தேவராஜன் என்கிற எண்ணத்தால் மதிகெட்டாள்.

मुनिवेषं सहस्राक्षं विज्ञाय रघुनन्दन ।

मतिं चकार दुर्मेधा देवराजकुतूहलात् ।।

என்றார் ஸ்ரீ வால்மீகி பகவான். கம்பரும்:

தையலால் நயனவேலும் மன்மதன் சரமும் பாய
உய்யலா முறுதிநாடி உழல்பவன் ஒரு நாள் உற்ற

மெய்யலால் அறிவு நீங்கி மாமுனிக்கு அற்றச் செய்து
பொய்யிலா உள்ளத்தான் தன் உருவமே கொண்டு புக்கான் –

என்று முனிவர் வேஷத்தோடேயே வந்ததாகச் சொன்னார். ஆனால் கோதமர் இதை அறிந்து தன்னிலம் வருங்காலத்தில் பூனை உருவுடன் நடுங்கித் திரும்பினான்.

"புரந்தரன் நடுங்கி ஆங்கோர் பூசையாயாய் போகலுற்றான்" என்றது கம்பராமாயணம், இப்படி தீயச் செயலைச் செய்து கோதமரின் சாபத்தைப் பெற்ற இவள் சக்கரவர்த்தித் திருமகனின் திருவடிதூளால் சாபத்தினின்றும் நீங்கி அவ்விராமனின் திருவடிகளில் பாத்யாதிகளைச் சமர்ப்பித்து மனதின் தூய்மையையும் பெற்றாள்.

पाद्यमर्घ्यं तथातिथ्यं चकार सुसमाहिता ।

என்றார் வால்மீகி. முன்பு கோதமர் சாபம் கொடுக்குமிடத்து "எப்பொழுது இராமன் இக்காட்டை அடைவாறே அவ்வமயம் சுத்தியை அடைவாய். அன்னவனுக்கு அதிதிசத்காரம் செய்த பிறகு லோபம், மோஹம் இவைகளைத் துறந்து என்னை அடைவாய்" என்றல்லவா சொல்லப்பட்டது.

சபரியும் தன் இருப்பிடம் அடைந்த ஸ்ரீ ராமனின் திருவடிகளை அலம்பி பாபத்தை அகற்றும் அத்தீர்த்தத்தை சிரஸில் தரித்தும், பருகியும் காட்டில் உள்ள புஷ்பங்களால் அவ்வெம்பெருமானின் திருவடிகளை அர்ச்சித்தாள்.

पादप्रक्षालनं  कृत्वा तत्तोयं पापनाशनम् ।

सिरसा धार्य पीत्वा च वन्यैः पुष्पैरथार्चयत् ।।

என்றது புராணம்.

पाद्यमाचमनीयं च सर्वं प्रादात् यथाविदि ।

என்பது வால்மீகி ராமாயணம்.

கண்ணனும் தருமபுத்திரனின் இராஜஸூய யாகத்தில் பாகவதர்களின் திருவடிகளில் தீர்த்தத்தைச் சேர்த்து இந்த உபசாரத்தை நாட்டாருக்குச் செய்து காட்டினான்.

"**कृष्ण: पादावनेजने**" என்று பாகவதத்தில் உள்ளது. எல்லா உலகுக்கும் ஈசனே! தரும புத்திரர் ராஜஸூய யாகம் செய்யும் போது எல்லா அரசர்களும் இவரிடத்தில்

சந்தோஷம் அடைந்தவர்களாயும் இவருக்கு அடங்கினவர்களாயும் வந்திருந்தனர். அப்போது தேவரீரும் அந்தணர்களின் திருவடிகளை அலம்புவது முதலியவற்றை செய்தீர்கள் அல்லவா! அவ்வரசனின் மேன்மையை என்னவென்று சொல்வது என்றார் ஒரு கவி: "**ब्राह्मणान् भर कौन्तेय**" "தருமபுத்திரனே! அந்தணர்களே நீர் பூஜிக்க வேண்டும் என்று கடைசியில் உபதேசம் செய்யப் போகிற இந்த மாயவியான கண்ணன் தான் அதை நடைமுறையில் செய்து காட்டாமல் இருப்பானா?"

கரியமாவினும் கண்நுதலானினும்
உரியதாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோர் ஐந்தினும் மெய்யினும்
பெரியர் அந்தணர் பேணுதி உள்ளத்தால் –

என்று இராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் நிச்சயித்தவாறே வசிஷ்டபகவான் உபதேசம் செய்தார். இவ்வர்த்தத்தை வசிஷ்டரிடம் அறிந்து, க்ருஷ்ணாவதாரத்தில் தருமபுத்திரர்க்கு உபதேசித்தான் போலும்.

தன் மாளிகையை அடைந்த குசேலரை, பர்யங்கத்தில் உட்காரவைத்து அவர் திருவடிகளை அலம்பி எல்லா உலகுக்கும் பாவனத்தை அளிக்கும் ஸ்ரீ கண்ணன் அத்தீர்த்தங்களைத் தன் சிரஸிலே தரித்தான். இப்படி எம்பெருமானே இதை செய்து காட்டினான் என்றால் நாம் மிகவும் பக்தியுடனும் இதை சிரத்தையுடனும் அவனிடத்தில் இதை செய்தால் அவன் மனம் உவந்து ஸர்வாநிஷ்டங்களையும் போக்கடித்து விரும்பியவைகளை அளிப்பான் என்பதில் சிறிதளவும் ஸம்சயம் இல்லை. "**अन्यत्पादावनेजनात् क चेच्छति**" என்பதையும் நோக்கவும்.

## ஆசமனம்

வைதிக கர்மங்கள் அனைத்துக்கும் முன்பும் பின்பும் ஆசமனம் செய்யவேண்டும் என்று சாஸ்திரம் வலியுறுத்துகிறது. போஜனம், பழம், தீர்த்தம் இவைகளை புசிக்கும் போதும் முன்பும் பின்பும் இதை செய்ய வேண்டும். பகவத் தீர்த்தத்துக்கும் ஸ்ரீபாத தீர்த்தத்துக்கும் இது அவசியமில்லை. இதைச் செய்ய வேண்டிய ரீதியை ஆஹ்னிகத்திலிருந்து தெரிந்து கொள்ளவும். இறைவனுக்கு பூஜை செய்யும்போது, "ஆசமனியம் ஸமர்ப்பயாமி" என்று சொல்லி மும்முறை சமர்ப்பிக்கவேண்டும். இங்கு ஒவ்வொரு உபசாரத்தையும் சமர்ப்பித்த பிறகு "இதைக் கண்டருள வேணும், இதை ஸ்வீகரிக்கவேணும், இதில் ஏற்பட்ட அபசாரங்களைப் பொருத்தருள வேணும், இதனால் உகப்பை அடைய வேணும்" என்று இறைவனிடத்தில் இறைஞ்ச வேண்டும்.

## பும்ஸூக்தயுக்த ஸ்நாநம்

நாம் காலையில் எழுந்ததும் நீராடுகிறோம். வைதிக காரியங்களை நீராடின பிறகே செய்யவேண்டும் என்றது சாஸ்திரம். **"स्नानमूला: कृयासर्वा:"** ஆயர் பாடியிலுள்ள பெண்கள் ஹேமந்தருதுவில் மார்கசீர்ஷமாதத்தில் அருணோதயமானதும் யமுனையில் நீராடின பிறகே நோன்பை அனுஷ்டித்தார்கள் என்றார் ஸ்ரீ சுகர்.


आप्लुत्यांभसि कालिन्द्याः जलान्ते चोदितेऽरुणे ।

कृत्वा प्रतिकृतिं देवीमानर्चुः नृप सैकतीम ॥

# 5

"கோழியழைப்பதின் முன்னம் குடைந்து நீராடுவான் போந்தோம்" என்று ஆண்டாளும் அருளிச் செய்தாள்.

பகவதாராதன ப்ரயோகத்தைச் சொல்லுகிறேன் என்று சொன்ன ஸ்ரீ பாஷ்யகாரரும் "மண்ணை எடுத்துக் கொண்டு" என்று தொடங்கி ஸ்நாநத்தையே முதலில் சொன்னார். இந்த ஸ்நாநத்தையும் முறைப்படி அனுஷ்டிக்க வேண்டும். ஆயர் பெண்கள் வஸ்த்ரம் இல்லாமல் நீராடினார்கள் என்று வஸ்த்ரங்களை அபகரித்து, கண்ணன் இதற்குப் ப்ராயச்சித்தமாக அஞ்சலி செய்ய வேண்டும் என்றான்.



நாராயணனை மனதில் த்யானம் செய்து கொண்டே நீராடவேண்டும். "ध्यायेन्नारायणं देवं स्नानादिषु च कर्मसु" என்றது ப்ரமாணம், அன்றியேல் யானை குளிப்பதோடு இது ஒக்கும். तीर्थानामवगाहनानि च गजस्नानं विना यत्पदद्वन्द्वाम्भोरुहसंस्मृतिर्विजयते देवः स नारायणः ॥ (मुकुन्दमाला) என்று குலசேகரப் பெருமானும் கூறினார். எம்பெருமானுக்கு ஸ்நாநாஸனம் ஸமர்ப்பித்து நீராட்டத்தைச் செய்விக்கும் போது புருஷ ஸூக்தத்தைச் சொல்ல வேண்டும். மந்திரங்களில் மூலமந்திரம் பிரபலம். இதற்கு மந்திர ப்ரஹ்மம் எனப் பெயர் உண்டு. இதை வ்யாபக மந்த்ரம் என்றும் சொல்லுவார். இது "நாராயண" என்னும் பதத்தை உள்ளில் வைத்துக் கொண்டு இருப்பதால் இம்மேன்மையைப் பெற்ற திருமழிசையாழ்வாரும் "நன்றாக நான் உன்னை அன்றியிலேன் கண்டாய் நாரணனே நீ என்னே அன்றியிலை" என்று இப்பதத்தின் பொருளை விளக்கியுள்ளார். வேதங்களில் புருஷ ஸூக்தமும் புராணங்களில் விஷ்ணு புராணமும் பாரதத்தில் பகவத்கீதையும் சிறந்தது என்பர்.

वेदेषु पौरुषं सूक्तं पुराणेषु च वैष्णवम् ।

भारते भगवद्गीता धर्मशास्त्रेषु मानवम् ।।

இந்த ஸூக்தத்தைச் சொன்னவுடன் நாராயணானுவாகத்தையும் சொல்லி அபிஷேகம் செய்ய வேண்டும். இந்த அனுவாகம் பரதேவதையை நிச்சயித்து காட்டுகிறது. ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய விரும்புமவர் ப்ரஹ்மத்தை உபாசிக்க வேண்டும் என்று உபநிடதம் கூறுகிறது. அந்த ப்ரஹ்மம் யாது எனில் இந்த அனுவாகம் ஸ்ரீமன் நாராயணனே என்று நிச்சயமாக தெரியப்படுத்துகிறது.

அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர்,

சிறியார் சிவப்பட்டார் செப்பில் - வெறியாய

மாயவனை மாலவனை மாதவனை ஏத்தாதார்

ஈனவரே ஆதலால் இன்று

என்று திருமழிசையாழ்வார் (நான்முகன் திருவந்தாதி 6) ச்ரிய: பதியான நாராயணனையே ஏத்த வேண்டும் என்றும் அது செய்யார் ஈனவர் என்றும் கூறினார். ஜைனர் அறியார் பௌத்தர் ப்ரமித்தனர். சிவபக்தர்கள் சிறியவர். இவர்கள் மாயாவியும் தன்னை அடைந்தவர்களிடத்தில் மோகத்தை உடையவனுமான எம்பெருமானைத் துதிக்க மாட்டார்கள். எனவே இவர்கள் அற்பர்கள் என்று கருத்து. இங்கு "மாயவனே மாலவனே" என்ற இரு பதங்களையும் கவனிக்க வேண்டும். அவன் மாயாவியானபடியால் விரோதிகளிடத்தில் மோஹ சாஸ்திரங்களைச் செய்பவன். மாலவனானபடியால் அண்டினவர்களிடத்தில் நல்ல சாஸ்திரங்களை செய்பவன். ஸ்வாமி தேசிகனும் தயாசதகத்தில் இதை அற்புதமாக அருளிச் செய்திருக்கிறார்,

विद्वत्सेवा कतक निकषैर्वीत पङ्काशयानां

पद्माकान्तः प्रणयति दये दर्पणं ते स्वशास्त्रम् ।

लीला दक्षां त्वदनवसरे लालयन् विप्रलिप्सां

माया शास्त्राण्यपि दमयितुं त्वत्प्रपन्न प्रतीपान् ॥

என்ற ச்லோகத்தில் இதைக் காணலாம். தேத்தான் கொட்டையை உறைத்தால் சேரு கீழே தங்கி நீர் தெளிவை அடையும். அதுபோல் கற்று உணர்ந்தவர்களை அடைவதால் தெளிவு பெறலாம். அம்மாதிரி தெளிவை அடைந்தவர்களிடத்தில் திருவேங்கடமுடையான் கண்ணாடி போன்ற தான் சாஸ்திரத்தைச் செய்து கொடுக்கிறான். விரோதிகளை அடக்க தயை இல்லாத சமயம் வஞ்சனை எண்ணமாகிற பெண்ணைச் சீராட்டி மாயாசாஸ்திரங்களைச் செய்கிறன் என்பது

கருத்து. केन मोहोऽन्यथा என்று அதிகரணஸாராவளியிலும் இவ்வர்த்தத்தைக் காணலாம்.





(दुर्वारा मोहनेच्छा निखिलजनयितुः केन मोहोऽन्यथा न- स्तस्मात्कर्मानुरूपन्दिशति फलमसौ तत्त्वबोधं भ्रमं वा। स्वोक्त्यादेस्सिद्धमेतन्निरुपधि विषमो नैव तस्मात् समोक्तिः कारुण्याद्विप्रलिप्सा न यदि वृजिनजं नेशनिघ्नं फलं स्यात् ॥- அதிகரணஸாராவளி).

இவ்வளவு மேன்மைப் பெற்ற புருஷ ஸூக்தத்தைக் கொண்டு இறைவனுக்கு ஸ்நாநம் செய்விக்க வேண்டும். குணங்களைப் பெற்றவனும், குற்றங்களே அற்றவனுமான எம்பெருமானன்றோ புருஷ ஸூக்தத்தில் கூறப்படுகிறவன்.

पुंसूक्तादि प्रसिद्धो गुणनिधि रघजिद्ब्रशब्दार्थ என்ற ஸாராவளியை நோக்கவும்

(जन्माद्यैश्चेद्विशेष्यं भवति बहुलताऽथोपलक्ष्यं ब्रवीषि ज्ञाताज्ञातादिदौःस्थ्यं व्यतिषजति न चालक्षिते स्यात्परीक्षा। उद्दिष्टब्रह्मचिन्ता तत इह कथमित्यत्र हेतुत्वलक्ष्यः पुंसूक्तादि प्रसिद्धो गुणनिधि रघजिद्ब्रशब्दार्थ उक्तः ॥)

விபவத்தில் வார்மலிகொங்கை யசோதை உகந்து கார் மலிமேனி நிறத்துக் கண்ணபிரானை மஞ்சனமாட்டியவாற்றை புதுவைக்கோன் பட்டர்பிரான்

வெண்ணெயளைந்தகுணுங்கும் விளையாடுபுழுதியும்கொண்டு
திண்ணெனெவிவ்விரா உன்னைத் தேய்த்துக்கிடக்கநான் ஒட்டேன்
எண்ணெய் புளிப்பழம்கொண்டு இங்கு எத்தனைபோதும் இருந்தேன்
நண்ணலரியபிரானே! நாரணா! நீராடவாராய்
(பெரியாழ்வார் திருமொழி 2-9-1)

முதலிய பாசுரங்களால் அற்புதமாக அருளிச் செய்திருக்கிறார். கண்ணனே! தடாவினில் தாரார் தடந் தோள்கள் உள்ளனவும் கை நீட்டி வெண்ணெயை அளைந்து உடலெல்லாம் பசையை அடைந்துள்ளாய், வெளியிலே சென்று விளையாடி உனது உடலில் புழுதியையும் படிய வைத்துள்ளாய். ஆகையால் தேய்த்துக் கொள்வதற்கு எண்ணெயையும், புளிப் பழத்தையும் எடுத்துக் கொண்டு எவ்வளவு நாழிகை நான் காத்திருப்பேன். உடனே நீ நீராட இங்கு எழுந்தருள வேண்டும். இங்கு பெரியாழ்வார் விபவாவதாரத்தையும் அர்ச்சையையும் ஒன்றாக்கி அனுசந்தித்துப் பேசுகிறார், அதனால் அர்ச்சையில் திருமஞ்சனத்துக்கு வேண்டிய புளி, எலுமிச்சம் பழம் முதலிய புளிப்பழங்களை எடுத்துரைத்தார்.

இவ்வாழ்வார் மற்றோரிடத்தில் கண்ணனுக்கு யசோதை நீராட்டம் செய்வித்த ப்ரகாரத்தை வெகு ரஸமாக அனுசந்தித்து சந்தோஷம் அடைகிறார்.

கையும்காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பையவாட்டிப் பசுஞ்சிறுமஞ்சளால்
ஐய நாவழித்தாளுக்கு அங்காந்திட
வையமேழும்கண்டாள் பிள்ளை வாயுளே.

(பெரியாழ்வார் திருமொழி 1-2-6)

கண்ணன் சிறு குழந்தை. அவனை மஞ்சனமாட்டுவதற்காக தாயான யசோதை தன் இரு கால்களையும் நீட்டிக் கொண்டு அவன் திருக்கைகளையும், திருக்கால்களையும் சீர்படுத்தி தன் கால்களில் படுக்க வைத்தாள். அப்போது குழந்தையான இவன் யசோதையின் இரு கால்களையும் கெட்டியாக பிடித்துக் கொண்டான். இவ்வனுபவத்தை லோகத்திலும் காணலாம். இப்படிப்பட்ட யசோதையின் பாக்யத்தை என்னவென்று சொல்வது. எந்த எம்பெருமானின் திருவடிகளை தேவர் முதலானவர் பிடித்துக் கொள்ளுகிறார்களோ அந்த எம்பெருமானன்றோ யசோதையின் திருவடிகளை இருகையாலும் பிடித்துக் கொண்டான்.

तवपादयुगं प्रपन्नः, किं वर्णयामि तव भाग्य महो यशोदे என்று வேதாந்த தேசிகனும் விஸ்மயிக்கிறார். அப்போது கொப்பரையிலுள்ள தீர்த்தத்தால் மெல்ல ஸ்நாநம் செய்வித்தாள். மற்றும் இவ்வசோதையின் பாக்யத்தை கேண்மின். ஸ்நாநம் செய்விக்கும் சமயம் சிறு மஞ்சளை எடுத்து நாக்கை வழிக்க நினைத்தாள். அதற்கு அனுகூலமாக இம்மாயக் குழந்தையும் வாயைத் திறந்தது. மண்ணுலகமும், மற்றுலகங்களும் இக் குழந்தையின் வாயினுள் கண்ணாரக் கண்டாள். தேவகிக்கு தன்னை சர்வேச்வரனாக காட்டிய இவன் யசோதைக்கும் அவ்வாறு காட்ட நினத்தான் போலும்.



ஸ்ரீ கிருஷ்ண! முன்பு தேவரீர் வராஹாவதாரம் எடுத்தீர். அவ்வமயம் ஏழு ஸமுத்திரங்களும் கூடியும் மகா வராஹ ரூபியான தேவருடைய திருமேனியில் உள்ள ஒரு மயிர்க் குழியையும் நிரப்ப திறமையற்றவைகளாக ஆயின. இப்போது உன் தாயான அசோதை தனது இரண்டு கைகளினுலும் ஜலத்தை எடுத்து அவ்வளவு ஜலத்தாலேயே உடலே நன்னத்து நிறைந்து வழியும்படி உம்மை நீராட்டி வைத்தாள் என்ன ஆச்சரியம்! என்ன மாயை என்றார் லீலாசுகர்.

# 6

## வஸ்த்ரம்

எம்பெருமானுக்கு வஸ்த்ரம் சமர்ப்பிப்பது ஒரு சிறந்த கைங்கர்யம். நாம் தீபாவளி முதலிய பண்டிகைகளில் புதிய வஸ்த்ரம் உடுத்திக் கொள்கிறோம், "ஆடையில்லாதவன் அரை மனிதன்" எனப் பழமொழியும் உண்டு. **वस्त्रेण वपुषा वाचा** என்றவிடத்தில் வஸ்த்ரத்தைத்தான் முதலில் எடுத்துள்ளது. ஸர்வ பதியான நம் பெருமானை ஆராதிக்கும்போது ஸ்த்ரீப்ராயரான நாம் வஸ்த்ரம் முதலியவைகளால் அலங்கரித்துக் கொண்டு செல்ல வேண்டும். தீபாவளி முதலிய பண்டிகைகளில் மாப்பிள்ளை முதலியவர்களுக்கு உயர்ந்த ரீதியில் வஸ்த்ரங்களை வாங்குவதையும், அர்ச்சையிலுள்ள கடவுளுக்கு வாங்காமல் இருப்பதையும் பெரும்பாலும் காண்கிறோம். எல்லா ஐச்வர்யத்தையும் நமக்குக் கொடுத்த அவன் விஷயத்தில் உபேக்ஷையாக இருப்பது தகாதது. வஸ்த்ர தானத்தையே ப்ரதானமாக நடத்திவந்த நந்தகோபனுடைய குமரனும், தான் த்ரௌபதி முதலியவர்களுக்கு அளவற்ற வஸ்த்ரங்களைக் கொடுத்து அநுக்ரஹித்தவனுமான எம்பெருமானுக்கு நாம் ஸமர்பிக்கும் வஸ்த்ரத்தால் உண்டாவது ஒன்றில்லை. அவன் அவாப்தஸமஸ்தகாமன். ஸ்ரீ வராஹ நாயனாருக்குக் கோரக் கிழங்கையுமன்றோ நிவேதனம் செய்கிறார்கள். "பரிவதில் ஈசனைப் பாடி புரிவதுவும் புகை பூவே" என்றன்றோ ஆழ்வார் அருளிச்செய்தார். எம்பெருமானுக்கு ஏதேனும் ஜலமும், ஏதேனும் பூவும், ஏதேனும் புகையும் அமையும். "கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும் உள்ளமாகக் கொள்ளோமே என்று திருமங்கை மன்னனும் மலர்களில் நியதி இல்லை என்றார், கண்டகாரிகா புஷ்பத்தை எம் பெருமானுக்கு ஸ்மர்பிக்க வேண்டாம் என்று சாஸ்திரம் சொன்னதுவும் கடவுளுக்கு ஆகாது என்கிற காரணத்தால் அன்று. பறிக்கிற பக்தன் கரங்களில் முள் பாய்ந்து விடும் என்ற காரணத்தால்தான் என்று ரசிகர் பணிப்பர்.

எனவே, நாம் இடுகிற பொருளின் தாரதம்யத்தை அவன் கணிசிக்கிறான் அல்லன். பரிபூர்ணனல்லாதவன், நாம் இடுவதைக் கொண்டே த்ருப்தி அடைய வேண்டுமாகையால் தாரதம்யத்தை பார்ப்பான், அவாப்த மைஸ்தகாமனான இவன் பத்ர புஷ்பாதிகளை இட்டாலும் இடுகிறவர்களின் பக்தியையே பார்த்து ஸ்வீகரிப்பான். அவன் பெருமைக்கு ஈடாக நம்மால் எதையும் இடவும் முடியாது. அவனும் அதை அபேக்ஷிக்கமாட்டான். இப்படியானால் நம் விஷயத்தில் அக்கடவுளுக்கு சந்தோஷம் எப்படி உண்டாகும் என்று நினைக்க வேண்டாம். வெகு காலமாக எம்பெருமானை விட்டு வேறு எதையோ செய்து வந்த நாம் அதை

விட்டு இப்போது இவன் விஷயத்தில் நினைவை வைத்துச் செய்யும் ஆராதன வியாபாரத்தைக் கண்டே அவன் சந்தோஷம் அடைவான். ஆகையால் நமக்கு சக்யமானத்தைக் கொண்டு அவனுக்கு சமர்பித்தால் அதை அவன் பெற்று நம் விஷயத்தில் மகிழ்ச்சி பெறுவான். "பூர்ண விஷயமாகையால் பெருமைக்கு ஈடாக பச்சை இடவொண்ணாது, ஆபிமுக்ய சூசக மாத்ரத்தாலே சந்தோஷம் விளையும்" என்று ஸ்ரீவசன பூஷணத்தில் இதை ரஸமாக அருளிச் செய்துள்ளார். ஆகையால் கடவுளுக்கு வஸ்த்ரத்தை சமர்பித்து நிறம் பெற வேண்டும் என்கிற எண்ணத்துடன் இடவேண்டும்.



பீதாம்பரம் எங்கே, நாம் இடும் வஸ்த்ரம் எங்கே, அவனன்றோ நம் எல்லோருக்கும் அம்பரம் முதலிய பொருள்களை அளிக்கிறவன். "அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும் எம்பெருமான்" என்ற ஸ்ரீ கோதையின் (திருப்பாவை-17) ஸூக்தியில் இதைக் காணவும். வஸ்த்ரம் முதலியவைகளை தானம் செய்பவன் நந்தகோபன் எனப் பொருள் கூறுவது போல் எம்பெருமானான கண்ணனும் இவைகளைத் தானம் செய்பவன் என்றும் பொருள் உரைப்பது உண்டு. த்ரௌபதிக்கு வஸ்த்ரத்தை அளித்தான் என்பது ப்ரஸித்தம். பாரத

யுத்தத்தில் அர்ச்சுனனுடைய தேரில் உள்ள களைப்பு அடைந்த குதிரைகளுக்குத் தண்ணீரை இவன் ஸங்கல்பித்து அளித்தான்.

मां श्रान्तवाहमरयो रथिनोभुविष्ठं न प्राहरन् यदनुभावनिरस्त चित्ताः

என்று இதை பாகவதம் (1-15-17) கூறியுள்ளது.

மன்னர் மறுக, மைத்துனன்மார்க்கு ஒரு தேரின் மேல்,
முன்னங்கு நின்று, மோழை எழுவித்தவன் மலை
(பெரியாழ்வார் திருமொழி, 4-2-6),

என்று பெரியாழ்வாரும் பணித்தார். தரும புத்ரன் காட்டில் இருந்தபோது வந்த துர்வாஸ மகரிஷிக்கு வயிறு நிறைய அன்னமிட்டான் என்பதும் பிரஸித்தம். இங்கு "அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும்" என்பதை நந்தனிடமும், யசோதையினிடமும், கண்ணனிடமும் பலராமனிடமும் அன்வயித்துப் பொருள் கூறலாம்.

ஆயர்பாடியைவிட்டு, கண்ணன் மதுரைக்கு எழுந்தருளினான். வழியில் கம்சனுக்காக உயர்ந்த வஸ்த்ரங்களை எடுத்து வரும் ரஜகனைப் பார்த்து இவ்வுத்தம புருஷனே யாசித்தான். எனக்கு இந்த வஸ்த்ரங்களைக் கொடு. உனக்கு நன்மையை செய்வேன். இதில் சம்சயமில்லை.

रजकं कञ्चिदायान्तं रङ्गकारं गदाग्रजः ।
दृष्ट्वायाचत वासांसि धौतान्यत्युत्तमानि च ॥ ३२ ॥
देह्यावयोः समुचितानि अङ्गः वासांसि चार्हतोः ।
भविष्यति परं श्रेयो दातुस्ते नात्र संशयः ॥ ३३ ॥
(ஸ்ரீமத் பாகவதம்10.41.32 & 33)

அதற்கு பாக்யமற்ற அந்த ரஜகன், காட்டில் உள்ள உங்களுக்கு அரசனின் பொருளில் வீண் ஆசை ஏன்? பிழைக்க விருப்பமில்லையோ? என்று சொல்லி, கொடுக்காமல் கோபித்துக் கொண்டான். நரக நாசனை நாவில் கொண்டு அழையாத மானிட சாதியிலே சேர்ந்த அவனுக்கு எம்பெருமானிடம் சமர்ப்பிக்க மதி எப்படி உண்டாகும்? மத்தகத்திடை கைகளைக் கூப்பி அவனடி பணியும் மகான்களுக்கன்றோ கடவுளிடத்தில் எல்லாப் பொருள்களையும் சமர்பிக்க ருசி உண்டாகும். உடனே கண்ணன் அவன் தலையைக் கீழே தள்ளி வஸ்த்ரங்களை

கோபர்களுக்கும் கொடுத்து தானும் அணிந்துகொண்டான். வெட்கமற்ற கைகேயியும் சுகுமாரமான வஸ்த்ரத்தை அணியும் இராமன் முதலோர்க்கு மரவுரியை உடுத்தக் கொடுத்தாள். இராமனுக்காக இதை எப்படி எப்போது சம்பாதித்து வைத்தாளோ! அறிகிலோம்.

महार्हवस्त्रसंवीतो भूत्वा चिरसुखोषितः।
काषायपरिधानस्तु कथं भूमौ निवत्स्यति ॥
(வால்மீகி ராமாயணம் 2.12.101)

உயர்ந்த ஆடைகளை உடுத்தி சுகமாக வசித்துள்ள என் புதல்வன் காஷாயத்தை உடுத்தி எப்படி பூமியில் வசிக்கப் போகிறான் என்று தசரதன் புலம்பினான். இந்த தயரதனின் ப்ராலபத்தை படிப்பவர்க்கும், கேட்பவருக்கும் மனது உருகும்படி குலசேகரப் பெருமாள் -

பூமருவு நறுங்குஞ்சி புன்சடையாய்ப் புனைந்து பூந்துகில் சேரல்குல்
காமரெழில் விழலுடுத்துக் கலனணியாது அங்கங்கள் அழகு மாறி,
ஏமருதோ ளென்புதல்வன் யானின்று செலத்தக்க வனம்தான் சேர்தல்,
தூமறையீர்! இது தகவோ? சுமந்திரனே! வசிட்டனே! சொல்லீர் நீரே.
--- பெருமாள் திருமொழி 9 – 6

என்று அருளிச் செய்தார். பொன் பெற்றார் எழில் வேதப் புதல்வனான ராமனுக்கும், அவன் தம்பிக்கும் மட்டுமா இந்த வல்கலத்தைக் கொடுத்தாள். பூவைபோலும் மின்பற்றா நுன் மறுங்கு மெல்லியலான சீதா பிராட்டிக்குமன்றோ அதைக் கொடுத்தாள். ஐயோ பாவம்! இதை உடுத்த அறியாதவளாய் இவள் இராமனைப் பார்த்து, "காட்டில் உள்ள முனிவர்கள் இதை எப்படி உடுத்திக் கொள்ளுகின்றனர்" என்று சொல்லி வெட்கமுற்றவளாய்த் திகைத்தாள். இராமனும் அவ்வவையின் நடுவில் வல்கலத்தை உடுத்தினான் அவளுக்கு.

कथं नु चीरं बध्नन्ति मुनयो वनवासिनः।
इति ह्यकुशला सीता सा मुमोह मुहुर्मुहुः (வா.ரா 2.37.12)

तस्यास्तत् क्षिप्रमागम्य रामो धर्मभृतां वरः।
चीरं बबन्ध सीतायाः कौशेयस्योपरि स्वयम् (வா.ரா 2.37.14)



என்றார் வால்மீகி. எம்பெருமானே அடியார்களிடத்தில் உள்ள ப்ரேமாதிசயத்தால் ஆடையை உடுத்திக் வைக்கிறான், இதை "ஆடை உடுப்போம்" (திருப்பாவை - 27) என்பதில் காணலாம்.

அவன் உடுத்தாத ஆடை ஆடையன்று என்று ரஸகனமாக மகான்கள் பணிப்பர். இக்கண்ணனுக்கே தறி நெய்பவன் வஸ்த்ரங்களால் அலங்காரம் செய்வித்தான். ப்ரசன்னனான கண்ணனும் இவ்வுலகில் சகல க்ஷேமங்களையும் கடைசியில் ஸாரூப்யத்தையும் கொடுத்தருளினான்.

ततस्तु वायकः प्रीतः तयोर्वेषमकल्पयत् ।

विचित्रवर्णैश्चैलेयैः आकल्पैरनुरूपतः ॥

(ஸ்ரீமத் பாகவதம் 10-41-40)

तस्य प्रसन्नो भगवान् प्रादात् सारूप्यमात्मनः ।

श्रियं च परमां लोके बलैश्वर्यस्मृतीन्द्रियम् ॥

(ஸ்ரீமத் பாகவதம் 10-41-42)

ஆகவே அர்ச்சையில் மங்களாசாஸனம் செய்யும் பெரியோர்கள் உயர்ந்த வஸ்த்ரம் முதலியவைகளை ஸமர்பிக்கின்றனர். இதனால் அளவற்ற பயன்களை அடைவார்கள் என்பது திண்ணம்.



டோலை ஸ்ரீ கண்ணன் - ஸ்ரீ அஹோபில மடம், *U.S.A*

# 7

## உபவீதம்:

நாம் யஜ்ஞோபவீதத்தை அணிகிறோம். சாஸ்திரம் வகுத்த வழியில் நன்கு ப்ரதிஷ்டை செய்து அணிந்து கொள்வது நலம். மந்திரங்களால் நன்கு ப்ரதிஷ்டை செய்து தரித்துக் கொண்டால் சகல நன்மைகளும் உண்டாகும். அப்படிப்பட்ட உபவீதத்துக்கே ஏத்தமுண்டு. இதை ஓர் அரசன், புரோஹிதனால் கொண்டு வரப்பட்ட யஜ்ஞோபவீதத்துக்குச் சமமாக, தங்கத்தைக் கொடுக்க முடியாமல் நின்றான் என்கிற கதையிலிருந்து உணரலாம். சிலர் தங்கள் வியாபாரத்துக்குத் தடங்கலாக இருக்கிறது என்று எண்ணி ஆணியில் மாட்டி விடுவார்கள். சிலர் சாவியை இதில் கோர்த்துக் கொள்வார்கள். ஐயோ பாவம்! இவர்கள் இதன் பெருமையை அறியாதவர்கள். பர்த்ருமதியான பெண்கள் சிலர், மாங்கல்யத்தை எடுத்து வைப்பதும் சில சமயம் கண்டத்தில் தரிப்பதும் எப்படி அவத்யாவஹமோ அந்த ரீதியை அனுசரிக்கும் இவர்கள் செய்கை **माङ्गल्य सूत्रमिव बिभ्रति** என்று ஸாதித்தார் வேதாந்த தேசிகன். **उपवीतिनमूर्ध्वपुण्ड्रवन्तं** என்றுயதிராஜஸப்ததியில் அருளினார். அந்த ச்லோகங்கள் கீழே காண்க.

दत्ताः प्रजा जनकवत् तव देशिकेन्द्रैः पत्याऽभिनन्द्य भवता परिणीयमानाः ।

मध्ये सतां महितभोग विशेष सिद्धै माङ्गल्य सूत्रमिव बिभ्रति किङ्करत्वम् ॥

(श्रीशरणागतिदीपिका)

उपवीतिनमूर्ध्वपुण्ड्रवन्तं त्रिजगत्पुण्यफलं त्रिदण्डहस्तम् ।

(श्रीयतिराजसप्ततिः-11).

சில ஆலயங்களில் எம்பெருமானுக்கு இதை உபசாரமாக ஸமர்பிப்பது உண்டு. அதைத் தாங்களும் பகவத் ப்ரசாதமாக தரித்துக் கொள்வதும் உண்டு.

यज्ञोपवीतं परमं पवित्रं प्रजापतेर्यत्सहजं पुरस्तात्।

आयुष्यमग्रयं प्रतिमुञ्च शुभ्रं यज्ञोपवीतं बलमस्तु तेजः ॥

என்ற மந்திரத்தில் இது பரம சுத்தியைக் கொடுக்கும் என்றும், ஆயுஸ்ஸையும், பலம், தேஜஸ் முதலியவைகளையும் கொடுக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

**नाभेरूर्ध्वमनायुष्यं अधस्तात्कर्मनाशनं , तस्मान्नाभिसमं प्रोक्तम् -** நாபிக்கு மேலாக தரித்தால் ஆயுஸ்ஸு குறையும். கீழாக இருந்தால் புண்ணியங்கள் போய்விடும், ஆகையால் நாபிக்கு ஸமமாக தரித்துக் கொள்ள வேண்டும். கடவுளுக்கு ஸ்வர்ண புஷ்பத்தை ஸமரப்பிப்பது போல் ஸ்வர்ணம் முதலியவைகளால் செய்யப்பட்ட உபவீதத்தையும் ஸமர்ப்பிப்பதும் உண்டு.

## மலயஜம் :

இதற்குச் சந்தனம் எனப் பொருள். இதன் சமர்ப்பணம் சிறந்த உபசாரம், ஆராதன காலத்தில் சந்தனத்தைச் சமர்ப்பித்தே ஆராதனம் செய்ய வேண்டும்.

"கந்தத்வாரம்" என்ற மந்திரத்தால் அபிமந்திரணம் செய்து மூல மந்திரத்தால் இதை ஸமர்ப்பிக்க வேண்டும்.

गन्धद्वारान्दुराधर्षान्नित्यपुष्टाङ्करीषिणीम् ।
ईश्वरीं सर्वभूतानान्त्वामिहोपह्वये श्रियम् ।

இம்மந்திரத்தின் அர்த்தத்தைக் கணிசித்தாலே இந்த உபசாரத்தை அவசியம் செய்ய வேண்டும் இன்று புலப்படும். இது லக்ஷ்மியை அழைக்கும் மந்திரம். மகாலக்ஷ்மி நல்ல பரிமள திரவ்யங்களைத் தான் வருவதற்கு மார்கமாகக் கொண்டவள். (அதாவது பரிமளமுள்ள திரவியங்கள் உள்ள இடத்தில் மகாலக்ஷ்மி வாசம் செய்வாள்). ஸர்வ கந்தனான எம்பெருமானிடத்தில் அன்றோ அவள் வசிப்பது ஒருவராலும் அவமதிக்கப்படாதவள். அசுத்தமான மனிதர்களால் அடைய முடியாதவள். எப்பொழுதும் எப்பொருட்களாலும் நிறையுள்ளவள். கரீஷிணீ என்ற திருநாமத்தைப் பெற்றவள். எல்லாப் பிராணிகளுக்கும் நாயகியாய் இருப்பவள். அனைவராலும் அடையப்படுகிறவள். இங்கு ஸ்ரீ சப்தத்தில் அர்த்த விசேஷங்களை நோக்கவும். அப்படிப்பட்ட உன்னை அழைக்கிறேன் என்பது இதன் பொருள். நாம் இறைவனின் உகப்பை முன்னிட்டு அவனுக்கு உபசாரங்களைச் செய்தாலும் ஆனுஷங்கிகமாய் ஐஸ்வர்யாதி பலன்களும் வரத் தட்டில்லை.

ஸ்ரீ விபீஷணாழ்வான், மோக்ஷரூபபலத்தை உத்தேசித்தே சரணாகதி செய்தானாக இருந்த போதிலும் இலங்கையரசு தானாக வந்தது போல் இங்கும் விரோதமில்லை. இதை ஸ்ந்த்யா வந்தனாதிகளிலும் காணலாம்.



ராஜமார்க்கமாகச் சென்றுகொண்டிருக்கும் கூனியை நோக்கி ஸ்ரீ கண்ணன், "நீ யார்", இந்தச் சந்தனம் யாருக்கு? உண்மையைச் சொல், எனக்கும், பலராமனாக்கும் உயர்ந்ததான சந்தனத்தைக் கொடு. உனக்குச் சீக்கிரத்தில் மங்களம் உண்டாகும் என்றான்.

का त्वं वरोर्वेतदु हानुलेपनं कस्याङ्गने वा कथयस्व साधु नः।

देह्यावयोरङ्गविलेपमुत्तमं श्रेयस्ततस्ते न चिराद्भविष्यति ||

(ஸ்ரீபாகவதம் 10-42-2)

सुगन्धमेतद् राजार्हं रुचिरं रुचिरानने

आवयोर्गात्रसदृशं दीयतामनुलेपनम् ।।

(ஸ்ரீவிஷ்ணு புராணம் 5-20-6)

"அண்ணர்க்கும், நமக்கும் பூசலாம்படி சாந்து இடவில்லையோ?" என்று கூனியைக் கண்ணன் கேட்டான். அவளும் வழக்கனாயிருக்கிற சந்தனத்தைக் கொடுத்தாள். அதற்கு கண்ணன் "சுகந்த மேதத்" என்றான். "புஷ்பாதிகளாலே ஏறிட்ட வாசனை உள்ள சந்தனம் இது, இயற்கையாகவே வாசனையுள்ள சந்தனத்தை நாங்கள் விரும்புகிறோம்" என்றான். பிறகு அவள் மேல் தரமாயிருக்கும் சாந்தைக் காட்டினாள். "ராஜார்ஹமேதத்", கம்சன் கர்வமுடையவனாகையால் எதையானாலும் பூசிக்கொள்வான் என்றான். அதற்கும் மேல் தரமான சாந்தை அவள் காட்டினாள். அதற்கும் எம்பெருமான் "ருசிரம் ஏதத்" இதில் நிறமே உபஜீவிக்கலாவது என்றான். இதைக் கேட்ட கூனி வெண்ணெய் நாற்றத்தில் பழகின இவர்கள் சந்தனத்தின் வாசியை எப்படி அறிந்தனர் என்று சிரித்தாள். இதைக்கண்ட எம்பெருமான் ருசிராநனே - சிரித்த முகமுடையவளே என்று கூப்பிட்டார். ஆவயோ: - என் உடம்புக்கும், என் அண்ணன் உடம்புக்கும் தகுந்தபடி சந்தனத்தைத் தா என்றார்.

இதைக் கேட்ட கூனியும் மிகவும் மனமகிழ்ச்சியுடன் இருவருக்கும் சந்தனத்தைப் பூசினாள். கண்ணபிரானும் அதிஸந்துஷ்டனாய் முதலில் காட்டிய 3 விதமான சந்தனங்களை விலக்கினது போல் அவளிடத்தில் உள்ள 3 கோணல்களையும் விலக்கி அவளை அழகியாளாகச் செய்தான். "

நாறிய சாந்தம் நமக்கிறை நல்கென்ன,
தேறி அவளும், திருவுடம்பில் பூச,
ஊறிய கூனினை உள்ளேயொடுங்க, அன்று
ஏறவுருவினாய்! அச்சோ அச்சோ
எம்பெருமான்! வாரா அச்சோ அச்சோ
(பெரியாழ்வார் திருமொழி 1-9-4)

என்று பெரியாழ்வாரும் அருளிச் செய்தார்.

எம்பெருமானுக்குச் சந்தனத்தை ஸமர்ப்பித்த இக்கூனி இதை மட்டுமா பெற்றாள்? எம்பெருமானோடுமன்றோ கலவிப் புரிந்தாள். இவள் விருப்பத்திற்கு இணங்கி எம்பெருமான் இவள் இல்லத்துக்கு வந்து புதுக்கலவியால் வெட்கமடைந்த இவளைக் கைகளைப் பிடித்து படுக்கையில் உட்கார வைத்து

இவளுடன் புணர்ந்தான். காரணம் என்? என்றால் சந்தனத்தை ஸமர்ப்பித்ததால் உண்டான புண்யம்தான், என்றது ஸ்ரீ பாகவதம் -

आहूय कान्तां नवसङ्गमह्रिया विशङ्कितां कङ्कणभूषिते करे ।

प्रगृह्य शय्यामधिवेश्य रामया रेमेऽनुलेपार्पणपुण्यलेशया॥

--- ஸ்ரீமத்பாகவதம் 10-48-6

இம்மாதிரி சில தினங்கள் அவள் இல்லத்திலே, அவளுடன் விளையாடி அவளுக்கு உபச்லோகன் என்று புதல்வனையும் கொடுத்தான்.

இப்படிச் சந்தனத்தால் எம்பெருமானை ஆராதித்து சில்வான பயனைப் பெற்றாள் இவள். எதையும் கொடுக்கத் தயாராக இருக்கும் அவனிடத்தில் சாயுஜ்யத்தைக் கேட்க விருப்பம் அற்றவளானாள் த்ரிவக்ரை, ஐயோ பாவம்! ஆகையால் தினந்தோறும் ஆராதன காலத்தில் பரிமளமுள்ள சந்தனத்தை ஸமர்ப்பித்தால் அவன் உகப்பு அதிகமாகும் என்பதில் ஐயமில்லே. நம்மாழ்வாரும்,


கோவைவாயாள் பொருட்டு ஏற்றினெருத்தமிறுத்தாய்! மதிளிலங்கைக்
கோவைவீயச்சிலை குனித்தாய் ! குலநல்யானை மருப்பொசித்தாய் !
பூவை வீயா நீர் தூவிப் போதால் வணங்கேனேலும், நின்
பூவை வீயாம் மேனிக்குப் பூசும் சாந்து என் நெஞ்சமே
(திருவாய்மொழி - 4-3-1)

என்று தன் நெஞ்சையே சந்தனமாக ஸமர்ப்பித்தார்.

# 8

## குசுமம்:


புஷ்ப ஸமர்ப்பணமும் ஓர் சிறந்த உபசாரம். தாமாகத் தோட்டத்தில் வளர்த்து அதில் உண்டான புஷ்பங்களைத் தொடுத்து எம்பெருமானுக்கு ஸமர்ப்பிப்பது மிகவும் உத்தமம்; காட்டில் உள்ள புஷ்பத்தின் ஸமர்ப்பணம் மத்யமம். விலைக்கு வாங்கி ஸமர்ப்பிப்பது அதமம், யாசித்துப் பெற்று ஸமர்ப்பிப்பது அதமாதமம்.



उत्तमं स्वार्जितं पुष्पं मध्यमं वन्यमुच्यते ।

अधमं तु क्रयक्रीतं पारक्यमधमाधमं ।। (भृगुसंहिता)

இதில் துளஸீ புஷ்பம் உயர்ந்தது. பெரியாழ்வாரும் தொண்டரடிப்பொடியாழ்வாரும் நந்தவன கைங்கர்யம் செய்து எம்பெருமானை ஆராதித்தார்கள் என்பது ஸ்பஷ்டமே. ஸ்ரீதேசிகன் அருளிச் செய்த ஸ்ரீகோதாஸ்துதியிலும் மற்றும்,



தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள் தொண்டரடிப்பொடியென்னும்
அடியனை அளியனென்றருளி உன்னடியார்க்கு ஆட்
படுத்தாய் பள்ளியெழுந்தருளாயே. (திருப்பள்ளியெழுச்சி)

மன்னுமதிள் திருமண்டங்குடிதான் வாழ
மார்கழிமாதக் கேட்டைநாளில் வந்து
துன்னு புகழ்த் தொண்டரடிப்பொடியே ! நீ முன்-
துழாய் மாலை பணியடிமை செய்து நாளும்
தென்னரங்க மணவாளற்கன்பு மிக்குச்
செப்பிய, நல் திருமாலை நாற்பத்தைந்தும்
பன்னிய நல் திருப்பள்ளியெழுச்சி பத்தும்
பழவடியேனுக்கருள் செய் பரிந்து நீயே.

(தேசிக ப்ரபந்தம், பிரபந்தசாரம் 11)

என்ற பாசுரங்களிலும் இதைத் தெளியவாம்.

ஸ்ரீஆண்டாளும் இறைவனுக்குப் பாமாலை ஸமர்ப்பித்தது போல் பூமாலையும் ஸமர்ப்பித்துத் தன் விருப்பத்தைப் பெற்றாள். **स्रजि निगळितं या बलात्कृत्य भुङ्क्ते** என்று ஸ்ரீ பராசர பட்டரும் அருளிச்செய்தார்.

வேயர்புகழ் வில்லிபுத்தூராடிப்பூரம்
  மேன்மேலும் மிகவிளங்க, விட்டுசித்தன்
தூயதிருமகளாய் வந்து அரங்கனார்க்குத்
  துழாய்மாலை முடிசூடிக் கொடுத்த மாதே
நேயமுடன் திருப்பாவைப் பாட்டாறைந்தும்
  நீயுரைத்த தையொருதிங்கட்பாமாலை
ஆயபுகழ் நூறுடன் நாற்பத்துமூன்றும்
  அன்புடனே அடியேனுக்கருள் செய்நீயே.

(தேசிக ப்ரபந்தம், பிரபந்தசாரம் 10)

என்றார் ஸ்ரீதேசிகன்.

"இலையையோ, புஷ்பத்தையோ, பலத்தையோ, ஜலத்தையோ அன்புடன் நிவேதனம் செய்தால் அதை நானும் அன்புடன் ஏற்றுக் கொள்வேன்" என்று சொன்ன பகவானுக்கு புஷ்பங்களை ஸமர்ப்பித்தால் ஸந்தோஷம் உண்டாகாமல் இருக்குமா? ஆலயங்களிலும் அர்ச்சனை செய்யும்போது துளஸீ முதலிய புஷ்பங்களைக் கொண்டுத்தான் அர்ச்சிக்கிறோம். ஸ்ரீகஜேந்திராழ்வாரும் புஷ்பங்களால் அர்ச்சித்தே நன்மையை பெற்றார், "நீரார் மலர்க்கமலம் கொண்டோர் நெடுங்கையால்" என்றது சிறிய திருமடல். இந்த யானையால் ஸமர்ப்பிக்கப்பட்ட புஷ்பத்தை ஸ்வீகரிக்க வேண்டும் என்று நினைத்தல்லவா எம்பெருமான் வைகுண்ட லோகத்திலிருந்து அரைகுலைய தலைகுலைய ஓடோடி வந்தது. முதலையைக் கொல்ல வேண்டும் என்று மாத்திரம் திருவுள்ளம் இருந்தால் வைகுண்டத்தில் இருந்துகொண்டு ஸங்கல்பத்தால் நாசம் செய்திருப்பான். காத்தருளவேணும் என்ற எண்ணத்தால் தேவரீரை நான் கூப்பிடவில்லை. என் கையில் உள்ள புஷ்பங்களைத் தேவரீர் திருவடியில் ஸமர்ப்பிக்கவேணும்" என்றுதான் யானை கதறியது.

नाहं कलेबरस्यास्य त्रानार्थं मधुसूदन ।

करस्थकमलान्येव पादयोरर्चितुं मुदा ॥

இதைக் கேட்ட எம்பெருமான், -

பெண்ணுலாம் சடையினானும் பிரமனும் உன்னைக் காண்பான்,
எண்ணிலா ஊழியூழி தவம் செய்தார் வெள்கி நிற்ப,
விண்ணுளார் வியப்ப வந்து ஆனைக்கு அன்று அருளை ஈந்த
கண்ணறா! உன்னை என்னோ? களைகணாக் கருதுமாறே
(திருமாலை 44, தொண்டரடிப்பொடியாழ்வார்)

என்று புள்ளூர்ந்து தோன்றினான். இங்கு "த்ரௌபதிக்கு வஸ்த்ரம் பலம்; ஸ்ரீகஜேந்திராழ்வானுக்கு கைங்கர்யம் பலம்" என்கிற ஸ்ரீவசனபூஷணப் பாசுரத்தை அனுஸந்திக்கவும்.



மதுரைக்கு எழுந்தருளும்போது நம்பி மூத்த பிரானையும், ஸ்ரீகண்ணனையும் மாலாகாரர் புஷ்பங்களால் அர்ச்சித்தும் மாலைகளை ஸமர்பித்தும் அளவற்ற பயன்களைப் பெற்றார்,

प्रसादपरमौ नाथौ मम गेहमुपागतौ ।
धन्योऽहमर्ज्जयिष्यामीत्याह तौ माल्यजीवनः ॥ (श्री विष्णु पुराणम्)

மாலையைத் தொடுத்து விற்று ஜீவிக்குமிவர் மாலையில் கண்ணோட்டம் இல்லாமல் வேறிடம் பார்த்துக்கொண்டே தொடுப்பாராம், உலகத்திலும் மாலையைத் தொடுப்பவர்கள் யாவரும் அதில் கண் செலுத்த மாட்டார்கள். "நான் இருந்த முடுக்குத்தெருவைத் தேடிவந்து என் இல்லத்துக்கு வந்தது என்? நான் தன்யனானேன். புஷ்பங்களால் அர்ச்சிக்கப் போகிறேன்" என்றார், ஸ்ரீராமகிருஷ்ணர்களைப் பார்த்து. பிறகு அர்ச்சித்தார். இதனால் நீண்ட ஐச்வர்த்தையும் சரீர பலத்தையும் ஆயுஸ்ஸையும், புகழையும், ஒளியையும் முடிவில் மோக்ஷத்தையும் இவருக்கு எம்பெருமான் அனுக்ரஹித்தார்.

श्रियं चान्वयवर्धिनीं, बलमायुः यशः कान्ति निर्जगाम सहानुजः

"ஸ்ரீவிதுரரையும் ஸ்ரீ மாலாகாரரையும் கூனியையும் போலே கிஞ்சித்கரித்தால் ஸ்வரூபம் நிறம் பெறுவது; மடி தடவாத சோறும், சுறு நாறாத பூவும், சுண்ணாம்பு படாத சாந்துமிரே இவர்கள் கொடுத்தது" என்று ஸ்ரீவசனபூஷணத்தில் இது மிக அழகாக கூறப்பட்டிருக்கிறது.

சரத் காலம் வந்தது. சந்திரனும் ஒளிவிட்டு விளங்கினான். ஆயர்பாடியில் பெண்கள் நிலவைக் கண்டு மயங்கினர். கண்ணனும் இவர்களோடு விளையாட மனம் கொண்டான். காட்டுக்குச் சென்றான். இடவணரை இடத்தோளோடு சாய்த்து, இருகைக்கூடப் புருவம் நெரித்தேற குட வயிறுபட வாய் கடைகூட குழல் ஊதினான். ஆயர் மங்கைமார்களும் கானத்தைக் கேட்டு இல்லத்தினின்று செல்ல மனம் கொண்டனர். அவரிருப்பிடம் சேர்ந்தனர். அவர்களுடன் மிக சந்தோஷத்துடன் விளையாடினான். அதிரஸம் செல்லா நின்றது. கோபிமார்களுக்கு வசம்வதனான கண்ணன் இது தகாது நினைத்து மறைந்தான். பிறகு அவன் உள்ள இடத்தைத் தேட ஆரம்பித்தனர். சிறிது துூரம் சென்றதும் கண்ணனின் காலடிகளைக் கண்டனர். ஒரு காலில் சங்கு ஒரு காலில் சக்கரம் உள்ளடி பொறித்தமைந்த கருகாலும் கொண்டு அங்கு எழுதினாற் போல் இலச்சினை பட நடந்து சென்றானன்றோ அவன். பின்னும் இவர் சென்றனர். அங்கு ஒரு பெண்ணின் காலடியையும் கண்ணன் காலடியையும் கலந்து இருப்பதைக் கண்டனர். அந்தோ! என்ன புண்ணியம் செய்தாள் இவள், முன் பிறவியில் இவளே புஷ்பங்களால் அர்ச்சித்தாள். எனவே இப்பிறவியில் கண்ணன் இவள் கூந்தலை வாரி புஷ்பங்களால் அலங்கரித்தான் என்றனர்.

अत्रोपविश्य सा तेन कापि पुष्पैरलङ्कृता ।

अन्यजन्मनि सर्वात्मा विष्णुरभ्यर्चितो यया।। (श्री विष्णु पुराणम्)

இதனால் இறைவனைப் புஷ்பங்களால் நாம் அர்ச்சித்தால் நம்மையும் அவன் புஷ்பங்களால் அர்ச்சிப்பான் என்பது ஸ்பஷ்டம் ஆகிறது. ஆழ்வாரும்,



நாடாதமலர்நாடி நாள்தோறும் நாரணன்தன்
வாடாத மலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று,
வீடாடி வீற்றிருத்தல் வினையற்றது என்செய்வதோ?,
ஊடாடு பனிவாடாய் ! உரைத்து ஈராய் எனதுடலே

--- (நம்மாழ்வார் திருவாய்மொழி 1-4-9)

என்று அருளிச் செய்தார்.

ஸர்வ ஸ்வாமியான எம்பெருமான் திருவடிகளில் புஷ்பாதிகளைக் கொண்டு ஸர்வகாலமும் சேஷவ்ருத்தியைச் செய்ய வேண்டும். இதற்காகவன்றோ தம் ஸ்வரூபம் ஏற்பட்டுள்ளது என்பது இதன் கருத்து. "நாடாத மலர் - தேட அரிய மலர்" என்ற அர்த்தம் கொண்டு அப்படிப்பட்ட புஷ்பம் ஆத்ம புஷ்பம் என்று சிலர் கூறுவர்.

கண்டுகொண்டு என் கைகளார நின்திருப்பாதங்கள்மேல்
எண் திசையுமுள்ள பூக்கொண்டு ஏத்தியுகந்துகந்து
தொண்டரோங்கள் பாடியாடச் சூழ்கடல்ஞாலத்துள்ளே
வண்துழாயின் கண்ணிவேந்தே! வந்திடகில்லாயே.

(நம்மாழ்வார் திருவாய்மொழி 4-7-8)

என்கிறபடி தேடவரிய புஷ்பங்களையெல்லாம் தேடி என்றும் சிலர் கூறுவர்.

சுமந்து மாமலர் நீர்சுடர் தூபம்கொண்டு
அமர்ந்து வானவர் வானவர் கோனொடும்
நமன்றெழும் திருவேங்கடம் நங்கட்குச்
சமன்கொள் வீடுதரும் தடங்குன்றமே
(நம்மாழ்வார் திருவாய்மொழி 3-4-6)

என்றும் அருளிச் செய்தார்.

நாம் கனத்த ஆதரத்தோடு புஷ்பங்களைச் சுமந்து அவனுக்கு இட்டால் அவனும் இவ்வாதரத்தை கனக்க நினைத்திருப்பான். ஸ்ரீபுருஷோத்தமமுடையான் என்பாரொருவர் செண்பகம் உவந்து சாத்துவார். சில ராஜபுத்திரர்கள் செண்பகம் கொண்டு சாத்தத்தேடி முன்பே பூவெல்லாம் விற்றுப்போய் ஒரு பூ இருந்தது கடையிலே. அப்பூவுக்கு, செறுக்காலே ஒருவருக்கொருவர் த்ரவியத்தைப் போர ஏற்றி இவர்களில் ஒருவன் நினைக்கவொண்ணாதபடி த்ரவியத்தைப் போர இட்டுக் கொண்டு வந்து சாத்தினான். அன்று இரா அவன் ஸ்வப்னம் காண்கிறான், "நீ இட்ட பூ எனக்குக் கனத்துச் சுமக்க ஒண்கிறதில்லை" என்று. என்கிற ஈட்டு க்ரந்தத்தில் இவ்விசேஷத்தைக் காணவும்.

## தூபமும் தீபமும்:

இறைவனுக்கு ஆராதன காலத்தில் இவைகளை அவசியம் ஸமர்ப்பிக்க வேண்டும். இவைகளை ஸமர்ப்பிக்காமல் ஆராதனம் செய்யக்கூடாது என்று சாஸ்திரம் கூறுகிறது.

धूर॑सि॒ धूर्व॒ धूर्व॑न्त॒न्धूर्व॒ तय्योँऽस्मान्धूर्व॑ति॒ तन्धूर्व॒ यव्वँ॒यन्धूर्वा॑म॒स्त्वन्दे॒वाना॑मसि॒

( संहिता प्राजापत्य-काण्डम्)

उद्दीप्यस्व जातवेदोऽप॒घ्नन्निर्ऋ॑ति॒ मम॑ । प॒शूश्च॒ मह्य॒मा व॑ह॒ जीव॑नञ्च॒ दिशो॑ दश

(एकाग्निः वैश्वदेव-काण्डम्)

மந்திரங்களின் பொருளைக் கவனித்தாலும் இவைகளை அவசியம் ஸமர்ப்பிக்க வேண்டும் என்று புலப்படும். ச்ராத்தாதிகளில் இவைகளை ஸமர்ப்பிக்க சௌகர்யம் இல்லாவிட்டால், "உதகேனைவ ஸங்கல்பிதோ தூப: ஜ்வாலாபேதேன ஸூர்யோ ஜ்யோதி:" என்று சொல்லி ஸமர்ப்பிப்பதை வழக்கத்தில் காண்கிறோம். ஆழ்வாரும்,

பரிவதி லீசனைப் பாடி
விரிவது மேவ லுறுவீர்!
பிரிவகை யின்றினன் நீர்தூய்
புரிவதுவும்புகை பூவே (திருவாய்மொழி1-6-1)

என்று அருளிச் செய்தார்.



இங்கு ரசகனமான ஓர் ஐதிஹ்யத்தைப் பெரியோர் பணிப்பர் கேண் மின். எம்பெருமானை ஆராதிக்கும் தருணத்தில் ஆறு ஆசனங்களை ஸமர்ப்பிக்கின்றோம்: 1. மந்திராஸனம் 2. ஸ்நாநாஸனம், 3. அலங்காராஸனம், 4. போஜ்யாஸனம், 5. புனர் மந்திராஸனம், 6. பர்யங்காஸனம் என்று இவ்வாஸனங்களுக்குப் பெயர். இவைகளில் போஜ்யாஸனமும் பர்யங்காஸனமும் சிறந்தவை. ஆஹாரமும் படுக்கையும் அன்றோ அனைவருக்கும் முக்கியமானவை. இவ்விரண்டு ஆஸனங்களும் எம்பெருமானுக்கு இவ்வுலகத்தில் நடைபெறுகின்றன, மற்ற ஆஸனங்கள் வைகுண்ட லோகத்தில். ஸ்ரீ ஆண்டாள் இதை மிக அழகாக அருளிச் செய்துள்ளாள்.



கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா உன் தன்னைப்
பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப் பூவே
பாடகமே என்றனைய பலகலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக்
கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்.

என்றன்றோ ஆண்டாளின் ஸ்ரீ ஸூக்தி.

ஆயர்பாடியில் பெண்கள் கண்ணனுடன் கலந்து புசித்து பரிமாற வேணும் என விரும்பினார்கள் என்பதை இதில் குறித்தாள். மேலும் ஆயர் சிறுவர்கள்

கண்ணனுடன் காட்டுக்குச் சென்று வனபோஜனம் செய்தனர். இதை ஸ்ரீ சுகர் வெகு ரசமாக பாகவதத்தில் அருளிச் செய்திருக்கிறார். குழந்தை பருவத்தில் கன்றுகளை மேய்க்க ஆயர் சிறுவர்களுடன் கண்ணன் காட்டுக்குச் செல்வது வழக்கம். காலையில் சென்றால் மாலை வரையிலும் மேய்த்துவிட்டு பிறகு திரும்புவர். அதனால் ஆய்ப்பாடி பெண்மணிகள் இச்சிறுவர்களுக்கு ஆடைத் தயிருடன் கலந்த அன்னத்தையும் அதற்குத் தக்கவாறு ஊறுகாய்களையும் கொடுத்தனுப்பவர். இதை எடுத்துக்கொண்டு வனத்துக்குச் சென்று அச் சிறுவர்களுடன் கண்ணன் அமுது செய்ததின் அழகே அழகு! இது வாசாமகோசரம். புல்லாங்குழலை இடுப்பிலும், கம்புகளை கக்ஷத்திலும், தயிரன்னத்தை கையிலும் ஊறுகாயை அழகிய விரல்களின் நடுவிலும் வைத்துக் கொண்டும் ஹாஸ்ய கதைகளைச் சொல்லி பரிஹஸித்துக் கொண்டும், சிறுவர்களின் கைவிரல்களில் உள்ள ஊறுகாயைத் தன் வாயால் கவ்விக் கொண்டும் அமுது செய்தான். ஆயர் சிறுவர்களின் அதிருஷ்டம் இவ்வகைப்பட்டது என்று யாரால் சொல்ல முடியும். யாகத்தில் ஹவிஸ்ஸை அமுது செய்கின்ற ஸர்வேச்வரனன்றோ சொர்க்க லோகத்தில் தேவர்கள் பார்த்துக் கொண்டிருக்க இம்மாதிரி அமுது செய்தான். இதனால் போஜ்யாஸனம் இவ்வுலகத்தில் உயர்ந்தது என்பது ஸ்பஷ்டம்.

குத்து விளக்கெறிய கோட்டுக் கால் கட்டில் மேல் மெத்தென்ன பஞ்ச சயனத்தின் மேலேறி நப்பின்னை கொங்கை மேல் வைத்துக் கிடந்த மலர் மார்பனான இவனுக்கு பர்யங்காஸனமும் இங்குதான் என்று சொல்ல வேண்டுமோ? மேலும் வைகுண்ட லோகத்தில் நித்ய சூரிகள் ஆராதிக்கும் காலத்தில் தூபம் ஸமர்ப்பித்த பிறகு எல்லா இடமும் புகை சூழ்ந்து விடும். அவ்வமயம் களவு செய்து உண்பதில் சுவை அறிந்த இவன் திடீரென்று வெண்ணெயைக் களவு செய்ய ஆயர் பாடிக்கு வந்துவிடுவான்.

पश्यत्सु सूरिषु सदा परमं पदं ते

देव्या श्रिया सह वसन् परया विभूत्या।

योगेन योगनिरतैः परिमृग्यमाणः

किं त्वं व्रजेषु नवनीतमहो ! व्यमुष्णाः (श्री अतिमानुषस्तवः)

என்றார் ஸ்ரீ கூரத்தாழ்வார்.

## ஸ்ரீ ப்ரஹ்லாதவரதன் வனபோஜன உத்ஸவம் – கீழஹோபிலம்















# 9

"கண்ணா! நீ பரம ஐச்வர்யத்துடன் மஹாலக்ஷ்மியோடு பரமபதத்தில் வாஸம் செய்கிறாய். இடையூறு இல்லாமல் எப்போதும் நித்யஸூரிகள் உன்னைக் கண்ணாரக் கண்டு அனுபவிக்கின்றனர். பரம யோகிகளுக்கும் அறியப்படாதவனாய் உள்ள நீ ஆயர்பாடியில் சென்று வெண்ணெயை ஏன் களவு கண்டாய்" என்று ஸ்ரீ கூரத்தாழ்வார் இவ்வர்த்தத்தை அனுபவித்துப் பேசினார்,

நம்மாழ்வாரும் அழகாக -

சூட்டு நன்மாலைகள் தூயன வேந்தி, விண்ணோர்கள் நன்னீர்
ஆட்டி அந்தூபம் தரா நிற்கவே அங்கு, ஓர் மாயையினால்
ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போந்திமிலேற்று வன்கூன்
கோட்டிடை யாடினை கூத்து அடலாயர் தம் கொம்பினுக்கே"
(திருவிருத்தம்) - என்கிறார்.

இப்படி, களவு செய்து புசிக்க விரும்பி இங்கு வந்த எம்பெருமான் அங்கு இல்லாததாலும் புகை சூழ்ந்திருப்பதாலும் காணப்படவில்லேயே என்று விஸ்மயித்து அவனைக் காண தீபம் ஸமர்ப்பிப்பது. என்வே போஜ்யாஸனம் இவ்விடத்தில் என்பது ஸ்பஷ்டம்.

"புஷ்ப தூப தீபங்களை அவசியம் ஸமர்ப்பிக்க வேண்டும்" என்று பாரதத்தில் ஆநுசாஸன பருவத்தில் மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

श्रियं चापि दधाति हि, देवताभ्यः सुमनसो यो ददाति नरः शुचिः,

तस्य तुष्यन्ति वै देवाः तुष्टाः पुष्टि ददत्यपि

अमृतं मनो ह्लादयते श्रियं चापि दधाति ह।

तस्मात्सुमनसः प्रोक्ता नरैः सुकृतकर्मभिः।।

देवताभ्यः सुमनसो यो ददाति नरः शुचिः।

तस्मै सुमनसो देवास्तस्मात्सुमनसः स्मृताः।।

ஐச்வர்யத்தைக் கொடுக்கும் தேவதைகளின் பொருட்டு, சுத்தியுடன் எவன் புஷ்பத்தை ஸமர்ப்பிக்கிறானோ அவன் விஷயத்தில் தேவர்கள் சந்தோஷமடைகின்றனர். தேக புஷ்டியைம் கொடுகின்றனர்.

सद्यस्तुष्टिकर: स्मृत: त एव प्रीतिवर्धना: சீக்கிரத்திலேயே தேவர்களுக்குப் ப்ரீதியைக் கொடுப்பது தூபம். आलोकदानात् चक्षुष्मान् प्रभायुक्तो भवेन्नर: தீபஸமர்ப்பணத்தால் மனிதன் கண் பார்வை நன்றாக உடையவனாகவும், ஒளியோடு கூடியவனாயும் ஆவன்.

दीपहर्ता भवेदन्धः तमौ गति: தீபத்தைத் திருடுபவன் குருடனாவான். தமோ லோகத்தை அடைவான். दीप प्रद: स्वर्गलोके दीपमालेव राजते தீபத்தைக் கொடுப்பவன் சொர்க்க லோகத்தில் விளக்கு வரிசைபோல் விளங்குவன் என்று தீப ஸமர்ப்பணத்தின் மஹிமை விஷ்ணு தர்மத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால், நாம் ஆலயங்கள் தோறும் இவ்வுபசாரத்தை அவசியம் செய்ய வேண்டும். செய்விக்கவும் வேண்டும். நம் இல்லத்தில் அர்ச்சையிலுள்ள எம்பெருமானுக்கு இதைச் செய்தால் பல நன்மைகளை அவசியம் அடைவோம். திருவனந்தபுரம் என்னும் திவ்ய தேசத்திற்குச் சென்றிருக்கிறவர்களுக்கு இது அவசியம் தெரிந்திருக்கலாம். அங்கு தினந்தோறும் ஸாயங்காலத்தில் திருக்கோவில்களில் பல விளக்குகளை ஏற்றி எம்பெருமானுக்கு ஆராதனம் செய்கிறார்கள். தினமுமே தீபாவளிப் பண்டிகையாயும், திருக்கார்த்திகையாயும் விளங்கும் அத்திவ்ய தேசம். "உத்தீப்யஸ்வ" என்கிற இவ்வுபசார மந்திரத்தின் அர்த்தத்தை கணிசித்தாலே இதன் ஏற்றம் விளங்கும்.

## மதுபர்க்கம்:

இதுவும் ஓர் சிறந்த உபசாரம், अतिथि देवो भव நம் வீட்டை நாடி வந்த அதிதியை பூசிக்க வேண்டும் என்பது சாஸ்திரம். अतिथिः किल पूजार्हः प्राकृतोऽपि विजानता। (5.1.120) என்றார் வால்மீகி. நன்கு உணர்ந்தவன் அதிதி ஒன்றும் அறியாதவனாய் இருந்த போதிலும் அவனை பூசிக்க வேண்டும் என்பது இதன் பொருள். "மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து", என்பது திருவள்ளுவரின் குறள் (விருந்தோம்பல் எண்: 90). அனிச்சம் பூ என்னும் மலர் நாம் முகர்ந்தவுடன் வாடிவிடும். அதுபோல நம் வீட்டுக்கு வந்த விருந்தினரை முகம் வேறுபட்டு பார்க்க வாடிவிடுவர் என்பது இதன் கருத்து, ஆராதனம் செய்த பிறகு (கோதோஹனகாலம்) பால் கறக்குமளவான காலம் யாராவது விருந்தினர் வந்திருக்கிறார்களா என்று பார்த்த பிறகே தான் புஜிக்க வேண்டும். இவர்கள் பூஜையில் மதுபர்க்கம் அவசியம் சமர்ப்பிக்கவேண்டும். பீஷ்மர் என்ற அரசன் தன்

மகளான ருக்மிணிக்கு விவாஹம் நிச்சயித்த பிறகு அவ்விவாஹத்தைப் பார்க்க வந்த ராமகிருஷ்ணர்களுக்கு ராஜார்ஹமான மாளிகையை அளித்து, அவர்களைப் பூசித்து மதுபர்க்கத்தை ஸமர்ப்பித்தான்.

**मधुपर्कमुपानीय** (1*) என்றது ஸ்ரீ பாகவதம். **मधुवाता ऋतायते** (2*) என்ற மந்திரங்களைச் சொல்லி இதை ஸமர்ப்பிக்க வேண்டும். தயிர், பால், நெய், தேன் வெல்லம் இவைகளைச் சேர்த்து செய்யப்படும் பொருளை ஸமர்ப்பிப்பது இவ்வுபசாரம், ஆழ்வாரும் இதை,

தானும்யானுமெல்லாம் தன்னுள்ளே கலந்தொழிந்தோம்
தேனும் பாலும் நெய்யும், கன்னலும் அமுதுமொத்தே
(திருவாய்மொழி 2-3-1)

என்று அருளிச் செய்தார்.

இங்கு கூறப்பட்ட இவ்வைந்து பொருள்களும் எல்லாம் ஒன்று கலந்தது போல் நானும், எம்பெருமானும் ஒன்று கலந்தோம் என்று இதை சூசிப்பித்தார்.

இதை ஸ்ரீ பாஷ்யகாரர் தன் நித்ய க்ரந்தத்தில் **"मधुपर्कम् अवनतशिराः हर्षोत्फुल्लनयनः हृष्टमनाः भूत्वा प्रदाय"** (3*) "தலை வணங்கியவனாகயும், சந்தோஷத்தால் மலர்ந்த கண்களையுடையவனாயும் மன மகிழ்ச்சி உள்ளவனாயும் மதுபர்க்கத்தை ஸமர்ப்பித்து" என்று கம்பீரமாக அருளிச் செய்தார்.

## அர்ஹணாம்பு:

**"शीतलोकसमायुक्तं एला कर्पूरसंयुक्तं ... ... ...वासनायुक्रं अर्हणाम्बु समीरितं"** ஏலக்காய் பொடி, பச்சைக் கற்பூரம், வாசனைப் பொருள் முதலியவைகளோடு சேர்ந்த குளிர்ந்த தீர்த்தம் அர்ஹணாம்பு எனப்படும்.

எம்பெருமானுக்கு போஜ்யாஸனம் ஸமர்ப்பித்த பிறகு ஹவிஸ்ஸை நிவேதனம் செய்வதற்கு முன்பு இந்த அர்ஹணாம்பு உபசாரத்தை செய்ய வேண்டும். **अर्हण पूर्वक हविः निवेदयेत्** (4*) என்று நித்யத்தில் பாஷ்யக்காரர் அருளிச் செய்தார். இதை அர்க்ய ஜலத்தால் கொடுக்க வேண்டும் என்று ஆஹ்நிக கிரந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

(மேற் கண்ட * குறிப்புகளின் விரிவான ச்லோகங்கள்)



1*) मधुपर्कमुपानीय वासांसि विरजांसि सः उपायनान्यभीष्टानि विधिवत्समपूजयत्

2*) मधु वाता ऋतायते मधु क्षरन्ति सिन्धवः। माध्वीर्नः सन्त्वोषधीः ॥

मधु नक्तमुतोषसि मधुमत्पार्थिवँ रजः । मधु द्यौरस्तु नः पिता ॥

मधुमान्नो वनस्पतिर्मधुमा ँ अस्तु सूर्यः । माध्वीर्गावो भवन्तु नः (वैश्वदेव-काण्डम् )

3*) भोज्यासनम् अभ्यर्च्य प्रणम्य, अनुज्ञाप्य, पादुके प्रदाय, तत्रोपविष्टे पाद्याचमनीय अर्हणानि दत्वा, गुडं माक्षीकं सर्पिः दधि क्षीरं चेति पात्रे निक्षिप्य, विशोध्य, अर्घ्यजलेन संप्रोक्ष्य, मधुपर्कम् अवनतशिराः हर्षोत्फुल्लनयनः हृष्टमनाः भूत्वा प्रदाय आचमनं दद्यात्

4*) ततः सुसंस्कृतान्नम् आज्याढ्यं दधि क्षीरमधूनि फलमूलव्यञ्जनानि मोदकांश्च अन्यानि लोके प्रियतमानि आत्मनश्च इष्टानि शास्त्राविरुद्धानि संभृत्य शोषणादि कृत्वा, अर्घ्य जलेन सम्प्रोक्ष्य, अस्त्रमन्त्रेण रक्षां कृत्वा, सुरभिमुद्रां प्रदर्श्य अर्हणपूर्वकं हविः निवेदयेत्

## 10

## பாயஸாத்யந்நஜாதம்:



விஷ்ணு பூஜையில் மாநஸிக ஆராதனம் என்பது ஒன்று உண்டு. இதை "सौवर्णे स्थालिवर्ये" என்ற ச்லோகத்தில் விசதமாகக் காணலாம். தங்கமயமான பாத்திரத்தில் பசுநெய்யோடு கூடிய பக்ஷ்யம், ஹவிஸ், அந்நம் முதலியவற்றைப் பல சாகங்களுடனும், தயிர், தேன், பால், நெய் இவற்றுடனும் வைத்து, எம்பெருமானுக்கு ஸமர்ப்பிப்பதாக மனஸ்ஸால் நினைப்பது தான் மாநஸிக ஆராதனம், இது போல் போஜ்யாஸநத்திலும் சுத்தமான பாத்திரத்தில் காத்யம், பேயம், சோஷ்யம், லேஹ்யம் என்னும் சதுர் விதமான அந்நத்தை வைத்து, கண்டாநாத புரஸ்ஸரம் (திருமணியை அடித்துக்கொண்டு), நிவேதனம் செய்ய வேண்டும். "शास्त्रविरुद्धानि आत्मनश्रेष्टानि संभृत्य" சாஸ்திரத்தால் தள்ளப்படாதவற்றையும், தனக்கு இஷ்டமானவற்றையும் ஸம்பாதித்து, எம்பெருமானுக்கு மிகவும் ஆர்வத்துடன் கண்டருளப் பண்ண வேண்டும் என்றார் ஸ்ரீ பாஷ்யகாரர். சாஸ்திரம் விலக்கியவற்றை நாம் புசிக்கக்கூடாது. எம்பெருமானுக்கும் அவற்றை ஸமர்ப்பிக்கக்கூடாது. இங்கு விலக்கிய பொருள்

எவை, விலக்காதவை எவை என்பதை ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிய "ஆஹார நியமம்" என்னும் நூலில் கண்டுகொள்வது. கைக்கொள்ளத்தக்க பொருள்களிலும், நமக்கு விருப்பமான பொருள்களையே நிவேதனம் செய்ய வேண்டும், விருப்பம் இல்லாதவற்றைச் சமைத்து வைத்தால் கடவுளுக்கு நிவேதனம் செய்யும் காலத்தில், "ஐயோ! இதையா சமைத்தீர்கள்?" என்று மனம் நொந்து ஸமர்ப்பிக்க நேரிடும். அப்போது எம்பெருமானும் கைக்கொள்ள மாட்டான். இப்படி மனித ஸ்வபாவத்தை அறிந்தே பாஷ்யகாரர் அப்படி அருளிச்செய்தார்.

உயர்ந்த பொருள்களை ஸம்பாதித்து நிவேதனம் செய்யும் காலத்தில் (देहि मे ददामि ते) "நீ எனக்குக் கொடு, நான் உனக்குக் கொடுக்கிறேன்" என்ற எண்ணத்தை விடவேண்டும், நாம் அவனுக்கு ஒன்றை ஸமர்ப்பிக்கும்போது அவனிடமிருந்து வேறொரு பயனைக் கொள்வது முறையன்று. நாம் ஸமர்ப்பித்ததை உவப்புடன் ஸ்வீகரித்தான் என்று, அதையே உபகாரமாக நினைத்து, மறுபடியும் நம் சக்திக்கு அநுகூலமாக ஸமர்ப்பித்து, அடிமை செய்ய வேண்டும். "இன்று வந்தித்தனையும் அமுது செய்திடப் பெறில், நான் ஒன்று நூறாயிரமாகக் கொடுத்துப் பின்னும் ஆளும் செய்வன்" என்பது சூடிக்கொடுத்த நாச்சியார் பாசுரம் (1*)

எந்தப் பொருளையும் எம்பெருமானுக்கு நிவேதனம் செய்யாமல் புசிக்கக் கூடாது. மாலமுது செய்யாமல் வந்தவெல்லாம் விலக்க வேண்டியவையே, "எம்பெருமானுக்காக இவை" என்று வைத்தவையும் அப்படியே. "ஸாளக்கிராம சிலை எவனுடைய வீட்டில் இல்லையோ அந்த வீட்டில் உள்ளவை எல்லாம் புசிக்கக்கூடாதவை" என்று ஸ்ம்ருதிகளில் பல இடங்களில் சொல்லியிருக்கிறது.

ஒரு சமயம் ஆயர்சிறுவர்களுடன் கண்ணன் தன் பொன்னடி நோவக் கானில் கன்றின் பின் சென்றான். அங்கே சிறுவர்கள் கடும் பசியினால் வாட்டமடைந்தனர்; தங்கள் பசியின் கொடுமையைக் கண்ணனிடம் முறையிட்டனர். கண்ணன் வருந்திச் சிறுவர்களைப் பார்த்து, "நம்மிடத்துக்கு அருகில் சில அந்தணர்கள் யாகம் செய்கின்றனர். அவர்களை அணுகி, நம்பி மூத்தபிரானும் கண்ணனும் பசியால் வருந்துகின்றனர். அவர்களுக்கு அந்நமிடுங்கள் என்று நீங்கள் கேளுங்கள். அவர்கள் அந்நமிடுவர். அதை நாம் புசிக்கலாம்" என்றான்,

இதைக் கேட்ட ஆயர் சிறுவர்கள் அந்த அந்தணர்களிடம் சென்று, "எங்களுடன் காட்டுக்கு வந்த கண்ணன் பசியால் தவிக்கிறான். கொஞ்சம் சோறு இட்டு அவனைக் காப்பாற்றுங்கள்" என்று கேட்டனர். யாகத்தில் தீவிரமான

பற்றுடைய அவர்கள், இவர்களின் பேச்சில் ஊக்கத்தைச் செலுத்தாமல் மௌனமாக இருந்துவிட்டனர். ஐயோ! கண்ணனின் பெருமையை அவர்கள் எப்படி அறிவார்கள்? அவர்கள் யாகம் செய்து என்ன பயன் அடைவார்கள்? யாகத்தில் ஸமர்ப்பிக்கும் ஹவிஸ்ஸை ஸர்வாந்தர்யாமியான பகவான் அன்றோ புசிக்கிறான்? அவனே நேரில் வந்து ஹவிஸ்ஸைக் கேட்க விரும்பினான். மகன் ஒருவர்க்கல்லாத மாமேனிமாயனான இவனுடைய உண்மையை அறியாதவர்களாய் அநாதரம் செய்துவிட்டார்களே!

ஸர்வகர்ம ஸமாராத்யனும் ஸர்வபலப்ரதனுமான எம்பெருமானின் மகிமையை அறியாத அந்தணர்களின் அநாதரத்தைக் கேட்ட சிறுவர்கள் கண்ணனிடம் முறையிட்டனர். பிறகு கண்ணன் சிறுவர்களைப் பார்த்து, நீங்கள் கவலைப்பட வேண்டாம். அந்த அந்தணர்கள் எல்லாம் அறிந்தவர்களாகத் தம்மை நினைத்திருக்கின்றனர், அந்தச் செருக்கினால் பேசாமல் இருந்துவிட்டனர். இனி நீங்கள் அவர்களிடம் செல்ல வேண்டாம். அவர்களின் மனைவியர் நிறைந்த ஆர்வமுடையவர்கள். அவர்களை அணுகி நீங்கள் கேட்டால் உடனே பயன் கைகூடும் என்றான்,

அதைக் கேட்ட சிறுவர்கள் ஓடோடிச் சென்று கண்ணனின் பொய்ப்பசித் துயரத்தைத் தெரிவித்தனர். இதைக் கேட்ட அந்தணர்களின் மனைவியர் கண்ணனின் பெருமையை உணர்ந்தவர்களானபடியால், தங்கள் கணவன்மார் தடுத்தும் நான்கு விதமான அந்நத்தையும் பாத்திரத்தில் வைத்துக் கொண்டு கண்ணனைத் தண்டனிட்டுத் தாங்கள் கொண்டு வந்த அந்நத்தை அவனுக்கு ஸமர்ப்பித்தனர். ஆஹா! இவர்களின் பாக்யத்தை என்னவென்று சொல்வது! ஸர்வ கர்ம ஸமாராத்யனான எம்பெருமான் நேரில் கேட்கவில்லை என்றனரே அந்தணர்கள். பெண்ணாகப் பிறந்தவர்களானலும் இவர்கள் எம்பெருமானிடத்தில் மிகுந்த காதலுற்றவர்களாய், கேட்டமாத்திரத்தில் கொண்டு வந்து ஸமர்ப்பித்தனரே.

"வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டு அடிசிலுண்ணும்போது" (2*) என்று கோதைப்பிராட்டியும் மிக்க ஆர்வத்துடன் இதை (நாச்சியார் திருமொழி) அருளிச் செய்தாள்.

गृहीतनाम्नि त्वयि संभ्रमाकुलाः, चतुर्विधं भोज्यरसं प्रगृह्य ताः ।

चिरं धृतत्वप्रविलोकनाग्रहाः, स्वकैर्निरुद्धा अपि तूर्णमाययुः ।।

"உன் திருநாமத்தைச் சொன்ன மாத்திரத்தில், பரபரப்புடன், நான்கு விதமான அந்நங்களை எடுத்துக்கொண்டு, வெகு காலமாய் உன்னைப் பார்க்க

வேண்டுமென்ற ஆவலுடன் கூடிய அந்தணர் மனைவியர், கணவர் தம்மைத் தடுத்தும், வெகு சீக்கிரத்தில் உன்னை அடைந்தனர்" என்றார் ஒரு கவி.

பிறகு அந்தணர்கள் இந்த விஷயங்களையும், கண்ணனின் மஹிமையையும் அறிந்தவர்களாய், தங்களை வெறுத்துக் கொண்டும், பெண்களான இவர்களைப் புகழ்ந்தும் பேசினர்: பின்பு, "நமக்கு எம்பெருமானிடத்தில் ஆர்வம் இல்லாவிட்டாலும், தெய்வபக்தி குடிகொண்ட பெண்களை மனைவிகளாக நாம் பெற்றோமே!" என்று ஒருவாறு தங்களைத் தேற்றிக்கொண்டனர். இதனால் ஆண்களைவிடப் பெண்களுக்குத் தெய்வபக்தி, ஆஸ்திக்யம் முதலிய நற்குணங்கள் பலவாக உள்ளன என்பதை உணருகிறோம். இக்காலத்திலும் பெண்களுக்கு உள்ள ஆஸ்திக்யத்தை நேரிலும் காண்கிறோம். "உண்டியே உடையே" என்று சில ஆண்கள் குளிப்பதும் உண்பதும், உடை உடுப்பதுமாகவே காலயாத்திரை செய்கின்றனர். ஸ்நானம் முதலியவற்றைச் செய்ததும், கடவுளுக்கு நிவேதனம் செய்வதையே சிலர் மறந்துவிடுகின்றனர். அத்தகைய இல்லத்திலும் பெண்மணிகள் சமைத்த பிறகு திருவிளக்கை ஏற்றி, "கடவுளே, நீ புசிக்க வேண்டும்" என்று சொல்லித் தண்டனிட்டுத் தம் சக்திக்கு அநுகுணமாக எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கின்றனர்.

சில ஸமயம் ருசிமிகுந்த பொருளை நிவேதனம் செய்ய நினைவில்லாமல் நாம் புசிக்கத் தொடங்கிவிடுகிறோம். பிறகு, "ஐயோ! எம்பெருமானுக்குக் கண்டருளப்பண்ண மறந்து விட்டோமே! என்ன பாவத்தைச் செய்தோம்!" என்று அநுதாபத்தையும் அடைகிறோம். அப்பொழுதே எம்பெருமான் ஜிஹ்வாபிமானி தேவதா ரூபியாய் இருந்து கொண்டு அதைப் புசித்து விடுவான் என்று பெரியோர் பணிப்பதும் உண்டு. எனவே எப்பொழுதும் எந்த வஸ்துவையும் இறைவனுக்கு, நிவேதனம் செய்தே நாம் புசிக்க வேண்டும்.

## பாநீயம்

பக்ஷ்யாதிகளை நிவேதனம் செய்யும் காலத்தில் நடுவில் நடுவில் பாநீயத்தை ஸமர்ப்பிக்கிறேன் என்று சொல்லி, தீர்த்தத்தை ஸமர்ப்பிக்க வேண்டும். "பத்ரம் புஷ்பம் பலம் தோயம்" என்று பழம் முதலியவற்றுக்குச் சமமாகத் தோயத்தை (சுத்த நீரை) எம்பெருமானே சொல்லியிருக்கிறான். தீர்த்தத்தை ஸமர்ப்பிப்பதனால் பல நன்மைகளை அடையலாம். நம் தரிசன ஸ்தாபகரான ராமாநுஜன் இந்தத் தோய ஸமர்ப்பணத்தால் தாமும் நன்றாக விளங்கி கருணா ஜலபரிபூர்ணனான எம்பெருமானின் கடாக்ஷத்துக்கு நம்மையும், பாத்திரராக ஆக்கினார். இதை ஸ்வாமி வேதாந்த தேசிகனும், யதிராஜஸப்ததியில்,



दत्तं येन दयासुधाम्बुनिधिना पीत्वा विशुद्धं पयः

काले नः करिशैलकृष्णजलदः काङ्क्षाधिकं वर्षति ॥

என்று அருளிச்செய்தார்.

(மேற் கண்ட * குறிப்புகளின் விரிவான ச்லோகங்கள்)

(1*)

இன்றுவந்து இத்தனையும் அமுது செய்திடப்பெறில், நான்
ஒன்று நூறாயிரமாகக் கொடுத்துப் பின்னும் ஆளும் செய்வன்
தென்றல் மணங்கமழும் திருமாலிருஞ்சோலை தன்னுள்
நின்ற பிரான், அடியேன் மனத்தே வந்து நேர்படிலே
(ஆண்டாள் - நாச்சியார் திருமொழி 9-7)

(*2)

கார்த்தண்முகிலும் கருவிளையும்
காயாமலரும் கமலப் பூவும்
ஈர்த்திடுகின்றன என்னை வந்திட்டு
இருடீகேசன் பக்கல் போகேயென்று
வேர்த்துப் பசித்து வயிறசைந்து
வேண்டு அடிசிலுண்ணும்போது, ஈதென்று
பார்த்திருந்து நெடு நோக்குக்கொள்ளும்
பத்த விலோசனத்து உய்த்திடுமின்
(ஆண்டாள் நாச்சியார் திருமொழி 12-6)

# 11

## பூகம்

இதற்குப் "பாக்கு" என்று பொருளாய், முகவாஸி தாம்பூலத்தை ஸமர்ப்பிக்க வேண்டும் என்பதில் தாத்பரியம். "**मातुलुंगफलोपेतं नारिकेलफलैर्युतम् । एलाकर्पूरतक्कोलैः मुखवासं समीरितम्॥**" துருவின தேங்காயையும், ஏலக்காய், பச்சைக் கர்ப்பூரம், ஜாதிபத்ரி முதலியவற்றையும் கலந்து, பாக்கில் சேர்த்து, மாதுளம்பழத்துடன் தாம்பூலத்தை எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்க வேண்டும். "முகவாஸத்து மாதுளங்காய்" என்று ஆகார நியமத்தில் ஸ்வாமி தேசிகனும், "முகவாஸத்துக்கே மாதுளங்காயைச் சேர்த்துக்கொள்ளலாம், மற்றக் காலங்களில் சேர்க்கக் கூடாது" என்றும் அருளிச் செய்தார். "**न क्रमुकद्वयम्**" எப்பொழுதும் இரண்டு பாக்கை ஸமர்ப்பிக்கக் கூடாது. விபவம் உள்ள ஸ்ரீரங்காதி திவ்ய தேசங்களில் உத்ஸவ காலங்களில் எம்பெருமான் எழுந்தருளும்போது அவனுக்கு ஒவ்வொரு கோணத்திலும் தாம்பூலம் ஸமர்ப்பிப்பதை நாம் காண்கிறோம்.

கண்ணன் ராஸக்ரீடை புரிந்தான். அப்பொழுது ஆயர் பெண்மணிகள் தம் விருப்பப்படி அவனுடன் விளையாடினார்கள். ஒரு கோபிகை கண்ணனின் தோளிலே சாய்ந்தாள். மற்றொருத்தி நறுமணமுள்ள சந்தனக் குழம்பு பூசிய கண்ணனின் திருக்கைகளை முத்தமிட்டாள்: பாக்கியவதியான மற்றொரு கோபிகை எம்பெருமானின் கன்னப் பிரதேசத்தில் தன் கன்னத்தை வைத்து அவன் மென்று புசித்த தாம்பூலரசமாகிய அமுதத்தை அருந்தினாள். "**पुण्यपूर्निधिरन्ववाप तव पूकचर्वितरसामृतम्**" என்றார் ஒரு கவி. இவளுடைய பாக்கியமே பாக்கியம். "உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் கலத்ததுண்டு தொடுத்த துழாய் மலர் சூடிக் களைந்தன சூடுமித் தொண்டர்களோம்" என்றபடி பெருமாள் தரித்துக் களைந்த வஸ்திரத்தையும் சூடிக் களைந்த துழாய் மாலையையும் பெறுவதற்கும் மேலான பேறு இவள் பெற்றாள் அல்லவா?

"ராஜசூய யாகத்தில் அர்ச்சிக்கத் தக்க கிருஷ்ணனை அர்ச்சிக்க விரும்புகிறேன். நீங்களும் அனுமதி செய்யுங்கள்" என்று ஸஹதேவன் உரைத்தான். கண்ணனின் பெருமையை இவனன்றோ நன்கு உணர்ந்தவன்? ஆகையினாலேயே அக்ரதாம்பூலத்தை ஸர்வஸ்மாத்பரனான கண்ணனுக்கே ஸமர்ப்பிக்க வேண்டுமென்று தீரனாய்க் கூறினான். மதிகேடனான சிசுபாலன் இவ்விஷயத்தை

மறுத்தான்; தீங்கையும் பெற்றான். எனவே ஆராதன காலத்திலும் தெருக்களில் எம்பெருமான் எழுந்தருளும் காலத்திலும் முகவாஸதாம்பூலத்தை அவசியம் ஸமர்ப்பித்து நாம் நிறம் பெற வேண்டும். பிறகு பகவந் நிவேதிதமான அந்தத் தாம்பூலத்தை நாம் புசிக்க வேண்டும். இதை நாம் புசிக்கும்போதும் சில நியமங்கள் உண்டு. இதை ஆஹார நியமத்தில் ஸ்வாமி தேசிகன் நன்றாக விளக்கியுள்ளார்.

## பரிகதி, நமனம்

ப்ரதக்ஷிணமும் வணக்கமும் செய்ய வேண்டும். அச்வத்த மரம், பசு முதலியவற்றைக் கண்டால் வலமாகவே செல்லவேண்டும். அதுபோல் தேவாலயங்களைக் கண்டாலும் ப்ரதக்ஷிணம் புரிய வேண்டும். இக்காலத்திலும் பெரியோர் இவ்வாறு செய்வதைக் காண்கிறோம். சக்ரவர்த்தி திருமகன் தான் காட்டுக்குச் சென்றபோதும் அபிஷேக ஸாமக்ரிகளை ப்ரதக்ஷிணம் செய்து சென்றான் என்றது ராமாயணம். "**शनैर्जगाम सापेपेक्षः**" (1*) இங்கு "ஸாவேக்ஷ:" என்று பாடமாக்கி, அபிஷேகப் பொருள்களில் உபேக்ஷையுடன் சென்றான் என்பர் சிலர். ஆயினும் "ஸாபேக்ஷ:" என்கிற பாடமே அழகியது. இந்த அபிஷேகப் பொருள்களைக் கொண்டு பரதனுக்கு அபிஷேகம் நடைபெற வேண்டும் என்று அபேக்ஷை; உள்ளவனாகவே சென்றான் என்று ரஸிகர் பணிப்பர்.

ப்ரதக்ஷிணத்திலும் ப்ரணாமத்திலும் மேல் வஸ்திரத்தை இடுப்பில் கட்டிக்கொள்ள வேண்டும். **जनार्दन जगद्बन्धो शरणागतवत्सल । त्वद्दासदासदासत्वं देहि मे दयया प्रभो॥** ஜனார்தனனே, உலகபந்துவே, அடியார்களிடத்தில் வாத்ஸல்யம் உள்ளவனே, உன் அடியார் அவர்க்கு அடியார் என்கிற கணக்கில் அடியேனுக்குப் பரம்பரை அடிமையைத் தயையால் தந்தருள வேண்டும்" என்று சொல்லி ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும்.

"அடியார்ந்த வையமுண்டு, ஆலிலையன்னவசஞ்செய்யும்
படியாதுமில் குழவிப்படி, எந்தை பிரான் தனக்கு
அடியார் அடியார் தம்மடியார், அடியார் தமக்கு
அடியாரடியார் தம் அடியார், அடியோங்களே"
(நம்மாழ்வார் திருவாய்மொழி - 3-8-10)

என்றல்லவோ ஆழ்வாரும் பகவத்பக்தியின் எல்லை நிலத்தை அழகாக அருளிச்செய்துள்ளார்?

"ஏகோபி கிருஷ்ணே ஸுக்ருத: ப்ரணாம: தசாச்வமே தாவப்ருதேந துல்ய: சாச்வமேதீ புநரேதி ஜந்ம க்ருஷ்ண ப்ரணாமீ ந புநர்பவாய||" ஸுக்ருதப்ரணாமம் என்பது ஒன்றுண்டு. ஸ்ரீ க்ருஷ்ணனிடத்தில் இந்த ப்ரணாமத்தைச் செய்பவன் அளவற்ற பயனை அடைவான். அச்வமேத யாகம் ஸ்வர்க்கம் முதலிய பயனைக் கொடுக்கும். அந்த ஸ்வர்க்கமும் அளவுள்ளதானபடியால் அதிக காலம் அந்தப் பயனை விரும்புகிறவன் ஒரு முறைக்குப் பல முறை செய்யலாம். இம்மாதிரி பத்துத் தடவை இந்த யாகத்தைச் செய்பவனும் க்ருஷ்ணனிடத்தில் மேற்கூறிய ப்ரணாமத்தைச் செய்பவனோடு சமானம் ஆகமாட்டான். ஏனெனில் பன்முறை யாகத்தைச் செய்பவன் மறுபடியும் இவ்வுலகில் பிறப்பான். ப்ரணாமத்தைச் செய்பவன் மறுபடியும் இங்கே பிறந்து கஷ்டங்களை அடையமாட்டான்; எம்பெருமானின் ஸாயுஜ்யத்தை அடைவான்.

நமஸ்காராத் மகம் யஸ்மை விதாயாத்மநிவேதநம் |

த்யக்தது: கோகிலாந் காமாந் அச்நுதேதம் நமாம்யஹம் ||



லக்ஷ்மீந்ருஸிம்ஹனிடத்தில் நமஸ்காரமாகிற சரணாகதியைச் செய்து எல்லாத் துக்கங்களினின்றும் விடுபட்டு ஸமஸ்த காமங்களையும் அடைகிறான் என்று மந்த்ரராஜபத ஸ்தோத்திரத்தில் பரமசிவனும் சொன்னார்.

இந்த ப்ரணாம விஷயத்தில் அப்பையதீக்ஷிதர் மிகவும் ரஸமாக ஒரு ச்லோகத்தைச் செய்துள்ளார்.

वपुःप्रादुर्भावादनुमिदं जन्मनि पुरा

मुरारे न क्वापि क्वचिदाप भवन्तं प्रणतवान्।

नमन्मुक्तस्संप्रत्यतनुरहमग्रेऽप्यनतिमान्

करिश क्षन्तव्यं तदिदमपराधद्वयमपि॥।

என்பது அவர் ச்லோகம், "தேவராஜனே. நான் தேவரீரிடத்தில் இரண்டு குற்றம் செய்துவிட்டேன். அதைப் பொறுத்தருள வேண்டும். அது என்னவென்றால் முன் பிறவியில் உம்மை நான் ஓரிடத்திலும் ஒரு சமயத்திலும் வணங்கவில்லை. அது எப்படித் தெரியுமென்று எம்பெருமான் வினவ, "முன்பிறவியில் உம்மை நான் வணங்கியிருந்தால் இந்தப் பிறப்பு எனக்கு உண்டாகாதன்றோ? இவ்வழுக்கு உடம்பை எடுத்தபடியினாலேயே அது எனக்குப் புலப்படவில்லையா?" என்று பதில் கூறினார், "மற்றொரு குற்றம் யாதெனில் அடுத்த பிறவியில் உம்மை நான் வணங்க மாட்டேன். அதுவும் ஒரு குற்றமல்லவா?" இதைக் கேட்ட இறைவன், "மறுபிறவியில் என்னை வணங்கமாட்டாய் என்பதை எப்படி அறிந்தாய்?" என்று கேட்டான். "இந்தப் பிறவியில் உம்மை வணங்கியபடியால் மறுபிறவி இல்லாததனால் பிறகு உம்மை வணங்க வழி இல்லையே!" என்று சமத்காரமாகப் பதிலளித்தார். "இப்படி இரண்டு விதமான குற்றங்களையும் தேவரீர் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்பது இதன் கருத்து:

இங்கு வணக்கத்தின் வகைகளையும், பல விசேஷங்களையும் புராணங்களைக் கொண்டு தெரிந்துகொள்ள வேண்டும்: "நாளும் நம் திருவுடையடிகள்தம் நலங்கழல் வணங்கி, மாளும் ஓரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே" என்று ஆழ்வாரும் (திருவாய்மொழி - நம்மாழ்வார்) விஸ்தரித்துக் காட்டியுள்ளார்.

## உத்வாஸனம்

நாம் ஆராதனம் செய்யும்வரை எம்பெருமானின் ஸாந்நித்யத்தை முன்பு கேட்டிருந்தபடியால், ஆராதனம் முடிந்த பிறகு இந்த உபசாரத்தைச் செய்ய வேண்டும். காயத்திரி ஜபம் செய்வதற்காக, காயத்திரி தேவதையை முதவில் ஆவாஹனம் செய்கிறோம். ஜபம் முடிந்தபிறகு உத்வாஸனத்தையும் செய்கிறோம். அதுபோல் இங்கும் என்று உணர்க. அர்ச்சையில் "நித்யம் ஸந்நிஹிதோ ஹரி"

என்றபடி, எப்பொழுதும் எம்பெருமான் ஸாந்நித்யத்தை அடைந்துள்ளான். நாம் இப்போது உத்வாஸனம் செய்கிறபடியால் வெளிக்கிளம்பி விடமாட்டான். ஆயினும் இவற்றை உபசாரபுத்தியுடன் செய்ய வேண்டியது அவசியம் என்பதைத்தான் இங்கே கொள்ள வேண்டும். பிறகு தீர்த்தாதிகளை ஸ்வீகரித்து, அது யாகம் என்று சொல்லப்படும் போஜனத்தைச் செய்ய வேண்டும். இந்த அநுயாகமும் ஆராதனத்துக்கு ஒர் அங்கமாகும்.





சாஸ்திரம் வகுத்தபடி இப்படி உபசாரங்களைச் செய்து எம்பெருமானை மகிழ்விக்க வேண்டும். நாம் செய்யும் உபசாரங்களில் நடுவில் தெரிந்தோ தெரியாமலோ வரக்கூடிய அபசாரங்கள் அனைத்தையும் பொறுத்தருள வேண்டும் என்று ப்ரார்த்தித்து, ஹ்ருஷ்டமநாவாய் வாழ வேண்டும்.

(1*) आभिषेचनिकं भाण्डं कृत्वा रामः प्रदक्षिणम्।

शनैर्जगाम सापेक्षो हृष्टिं तत्राविचालयन्॥ (2.19.31)

(முற்றும்)